

## சிறார்களுக்கு ஒரு வகை வைரஸ் தொற்றும் அபாயம்

சிறு பிள்ளைகளுக்கு தற்போது ஒரு வகை வைரஸ் தொற்று பரவுவதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வைரஸ் தொற்று ஏற்படுமாயின் தொண்டைவலி, காய்ச்சல்,

02 பக்கம்

Follow us

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 19 சுபகிருது வருடம், ஆடி மாதம் 02ஆம் திகதி திங்கட்கிழமை (18.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 18, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## எம்.பிக்களின் வீடுகள் மீண்டும் சுற்றிவளைப்பு?

யோ.தர்மராஜ்

இடைக்கால ஜனாதிபதி தெரிவின்போது, ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்கி அடுத்தகட்ட செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்ல நினைக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை சுற்றி வளைப்பதற்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக வெளியான தகவலையடுத்து, பாதுகாப்புத் துறையினர் உஷார் நிலையில் இருப்பதாக அறியமுடிந்தது.

02 பக்கம்


# இலங்கை நெருக்கடியை ஆராயும் விசேட மாநாடு

### அனைத்துக்கட்சிகள் பங்களிப்பில் நாளை இந்தியாவில்

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலையினை ஆராய்வதற்கான விசேட அனைத்துக்கட்சி மாநாடொன்று நாளை புதுடில்லியில் நடக்கவுள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

இந்த நெருக்கடி நிலைமையில் இலங்கைக்கு எப்படி உதவுவது என்பது குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளது. அனைத்துக்கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டில் இலங்கையின் நிலைமை குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கரும், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் விளக்கவுள்ளனர். இலங்கைக்கு எவ்வகையில் உதவுவது என்பது குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளது.

# நாடு திரும்புகிறார் கோட்டாபய!



வெளிநாடுகள் பலவற்றில் அனுமதி மறுக்கப்பட்டதால் தற்போது சிங்கப்பூரில் தங்கியிருக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை திரும்பவுள்ளாரென உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்யுமாறு எழுந்த மக்கள் கோரிக்கையினையடுத்து , கடந்த வாரம் இலங்கையிலிருந்து சென்ற கோட்டாபய தற்போது சிங்கப்பூரில் தங்கியிருக்கிறார்.

15 நாட்களுக்குப் பிறகு சிங்கப்பூரை விட்டு வெளியேறுமாறு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு....

02 பக்கம்

## தேசிய எரிபொருள் பாஸ்; முழு விபரங்கள் இதோ..

எரிசக்தி அமைச்சு, ICTA மற்றும் பல இலங்கை தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆதரவுடன் நாட்டில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகத்தை நிர்வகிப்பதற்கும் வரிசைகளை எளிதாக்குவதற்கும் தேசிய எரிபொருள் பாஸ் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

02 பக்கம்

## சஜித் கட்சியின் தீர்மானத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்



### மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கும் எந்தவொரு தீர்மானத்திற்கும் இணக்கம் தெரிவிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்...

02 பக்கம்

## ஜனாதிபதி தெரிவை குழப்பும் வேலைகளை அனுமதியாதீர்

### பாதுகாப்பு தரப்பினருக்கு பதில் ஜனாதிபதி பணிப்புரை

யோ.தர்மராஜ்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவி விலகியதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு இடைக்கால ஜனாதிபதியை தெரிவுசெய்யும்போது,

02 பக்கம்

## பொதுஜன பெரமுன இளைஞரணி டலஸுக்கு ஆதரவளிக்கத் தீர்மானம்

யோ.தர்மராஜ்

நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தெரிவின்போது, யாருக்கு ஆதரவளிக்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் இளைஞர் அமைப்பின் உறுப்பினர்களிடையே, வாக்கெடுப்பு ஒன்றை நடத்தியுள்ளதாக அறியமுடிகின்றது.

02 பக்கம்

## வீடிழந்த பெரமுன உறுப்பினர்கள் இல்லங்கள் அமைக்க ரணில் உதவி

பொதுமக்களின் தாக்குதல்களினால் வீடுகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் வீடுகளை நிர்மாணிப்பதற்கு பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கொள்கை தீர்மானம் எடுத்துள்ளார்.

அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனிப்பட்ட ரீதியில் அவ்வப்போது கருத்துக்களை பரிமாறிக் கொள்வதன் மூலம்....

02 பக்கம்

## ரஞ்சனை விடுவிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

### ரணில் கையில் தீர்மானம்



தற்போது சிறையிலுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக் கவை விடுதலை செய்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலை விவகார அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## மோசடி அரசியல் கலாசாரம் முடிவுக்கு வரவேண்டும்

### ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்த காரணத்தை கூறிய டலஸ்

02 பக்கம்

## உஷ்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய மாலைதீவில் இருந்து இந்தியாவுக்கு செல்ல இந்திய விமானமொன்று வரும்வரை காத்திருந்தாராம். இந்தியாவிலிருந்து புறப்பட்ட அந்த விமானம் இடைநடுவில் திருப்பிக்கொண்டு இந்தியாவுக்கே சென்றுவிட்டதாம். இந்திய அரசின் மேல்மட்ட அழுத்தம் காரணமாகவே இவ்வாறு விமானம் திரும்பியதாக தகவல்.

02 பக்கம்

## யாழ். வலிகாமத்தில் குரக்கன் பயிரிட விவசாயிகள் ஆர்வம்



யாழ்.செய்தியாளர்

யாழ். மாவட்டத்தின் வளங்களில் முக்கியமான ஒரு தானிய வகையாக காணப்படும் பெருமளவு இரும்புச் சத்தைக் கொண்டுள்ள குரக்கன் செய்கையில் தற்போது யாழ். வலிகாமத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க முடிகின்றது.

02 பக்கம்

## தமிழ்க் கட்சிகளின் பார்வைக்கு 10 அம்சக் கோரிக்கைகள்

### தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை முன்வைப்பு




'அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் செயற்பாட்டிற்கும் அனைத்து தமிழ்க் கட்சிகளின் பார்வைக்கும்' எனும் தொனிப்பொருளில் தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை, தமிழ் மக்களுக்கான பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..

ரணில் கோ ஹோம் எண்டு சொல்ல முடியாது...
அவரிட வீட்டைத்தான் எரிச்சுட்டாங்களே..



மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்




இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு
ரூ.10,000,000/-
மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்
ரூ.11,000,000/-
வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்
நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-
மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்
செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.
+9477 157 6356
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

## எரிபொருள் விலை குறைப்பு

எரிபொருள் விலையை குறைக்க சிபெட்கோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

நேற்றிரவு 10 மணிமுதல் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு விலை குறைக்கப் பட்டுள்ளது.

அதனடிப்படையில் 92 ஒக்டேன் வகை பெற்றோலின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 450 ரூபாவாகும். அத்துடன் 95 ஒக்டேன் வகை பெற்றோலின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 540 ரூபாவாகும்.

இதேவேளை ஒட்டோ டீசலின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் , புதிய விலை 440 ரூபாவாகும். மேலும் சுப்பர் டீசலின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 510 ரூபாவாகும்.

## தேசிய எரிபொருள் பாஸ்...

அமைச்சர் காஞ்சன விஜேசேகர இந்த முறையை கடந்த சனிக்கிழமை (16) செய்தியாளர் சந்திப்பில் மக்களுக்கு அறிமுகப்படுத்தியதுடன், மேலதிக விபரங்களையும் தெரிவித்தார்.

தேசிய எரிபொருள் பாஸ் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள்:

★இதனை பதிவு செய்யவேண்டிய இணையதளம்: https://fuelpass.gov.lk/

★அனைத்து வகையான தனியார் வாகனங்களுக்கும் வாராந்த ஒதுக்கீடு உத்தரவாதம்

★ நாடு முழுவதும் உள்ள அனைத்து CPC மற்றும் LIOC எரிபொருள் நிலையங்களுக்கும் பொருந்தும்

★ பொதுப் போக்குவரத்து சேவை வாகனங் களுக்கு எரிபொருள் கட்டுப்பாடு இல்லை.(பஸ்கள் / ரயில்கள்). இதனால் இந்த திட்டம் அவற்றிற்கு பொருந்தாது.

★ அடுத்த சில நாட்களுக்கு பதிவு திறந்திருக்கும். தேசிய அடையாள அட்டை/பாஸ்போர்ட் எண். / வணிக பதிவு எண், வாகன எண் & இயந்திர எண் கட்டாயம்

★ எரிபொருள் ஒதுக்கீடு தயாரானதும் பயனர் களுக்குத் தெரிவிக்கப்படும்

★ 1 தேசிய அடையாள அட்டை/ பாஸ்போர்ட்/ BRN – 1 வாகனம் மட்டும்

★ எரிபொருள் ஒதுக்கீடு கிடைத்ததும், எரிபொருள் பம்பில் QR குறியீடு தயாரிக்கப்படும். படம் அல்லது அச்சிடப்பட்ட நகல் பிரதி.

★ பயன்படுத்தப்பட்ட / கிடைக்கும் எரிபொருள் ஒதுக்கீடு மற்றும் காலாவதித் திகதி ஆகியவற்றை கணினி காண்பிக்கும்.

★ எரிபொருள் பம்ப் செய்யப்பட்டவுடன், பதிவுசெய்யப்பட்ட அலைபேசி எண்ணுக்கு ஒரு எஸ்.எம்.எஸ். வரும்.

★ வார எரிபொருள் ஒதுக்கீட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது.

★ வாகன எண்ணின் கடைசி இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருள் பம்ப் செய்ய நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

★ இறுதி வாகன இலக்கங்களின் அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படும் நாட்கள்

0, 1, 2 – திங்கள் மற்றும் வியாழன்

3, 4, 5 – செவ்வாய் மற்றும் வெள்ளி

6, 7, 8, 9 – புதன், சனி & ஞாயிறு

★ எரிபொருள் பாஸ் சிஸ்டம் செயல்பட்டவுடன் மட்டுமே பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் விநியோகத்தைத் தொடங்கும்.

★ எரிபொருள் கூட்டுத்தாபன எரிபொருள் நிலையங்களுக்கு அருகில் வரிசையில் நிற்க வேண்டாம்.

★எரிபொருள் பாஸ் முறை நடைமுறைப் படுத்தப்படும்வரை LIOC தற்போதைய முறை தொடரும்.

## ரஞ்சனை விடுவிக்கும்...

ரஞ்சன் ராமநாயக்கவின் பதிவுகளை சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

மேற்படி ஆவணங்களை ஆராய்ந்து சட்டமா அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பின்னர் ரஞ்சனின் விடுதலை தொடர்பான தனது பரிந்துரையை வழங்கவுள்ளதாக அமைச்சர் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ரஞ்சனின் விடுதலை தொடர்பில் தனது பரிந்துரையை சமர்ப்பித்ததன் பின்னர் பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இறுதித் தீர்மானத்தை எடுப்பார் என அமைச்சர் தெரிவித்தார்.

## நாடு திரும்புகிறார்...

சிங்கப்பூர் அரசு கூறியுள்ளதாக தகவல்

இதனால், அடைக்கலம் கோரி அவர் இந்தியாவை அணுகியதாகவும் ஆனால், அவரது கோரிக்கையை இந்தியா நிராகரித்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

சிங்கப்பூரில் இருந்து வெளியேறி பாதுகாப்பான நாடொன்றுக்கு செல்ல முடியாதபட்சத்தில் கோட்டா மீண்டும் இலங்கை திரும்பலாமென சொல்லப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி என்ற சிறப்புரிமை அவருக்கு இருப்பதால், அவருக்குரிய பாதுகாப்பு வழங்கப்படலாமென தெரிகிறது. எதிர்வரும் 21ஆம் திகதியளவில் அவர் இலங்கை திரும்பக்கூடுமென அறியமுடிந்தது.

## யாழ்.வலிகாமத்தில்...

நாட்டில் தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவிவரும் நிலையில், எதிர்காலத்தில் பாரியளவு உணவு நெருக்கடியும் ஏற்படக் கூடும் எனத் துறைசார் வல்லுநர்களால் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உணவு நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் தமது உணவுத் தேவையைத் தாமே ஈடு செய்யும் வகையில் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியிலும் விவசாயிகள் இவ்வாறு குரக்கன் செய்கையில் ஆர்வம் காட்டி வருவதைக் காண முடிகின்றது.

குறிப்பாக யாழ். வலிகாமத்தின் கட்டுவன், குப்பிழான், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, சுன்னாகம், அச்செழு, ஊரெழு, உரும்பிராய், உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் குரக்கன் செய்கையில் பரவலாக ஈடுபட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# இலங்கை உணவு நெருக்கடியை தவிர்ப்பதற்கு இன்னும் அதிகமாக செயற்பட வேண்டியுள்ளது

## ரணில் தெரிவிப்பு

உலக உணவு நெருக்கடி தொடர்பில் G7 கூட்டமைப்பு இலங்கைக்கு 14 மில்லியன் அமெரிக்க டொலர்களை உணவுக்காக செலவிட முன்வந்துள்ளதாக தெரிவித்த பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகள் உணவு நெருக்கடியை தவிர்ப்பதற்கு இன்னும் அதிகமாக செயற்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச மாநாட்டின்போது உரையாற்றிய பதில் ஜனாதிபதி விக்ரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையில் சுமார் 6 மில்லியன் மக்கள்



ஊட்டச்சத்து குறைபாட்டால் அவதிப்படுவதாக கூறப்படுகிறது. சில அறிக்கைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் 7.5 மில்லியன் பேர்வரை இருக்கலாம் என்று கூறுகின்றன. இலங்கையின் சராசரி நெல் உற்பத்தி பொதுவாக 24 மில்லியன் மெட்ரிக் தொன் ஆகும். இருப்பினும், 2021இல் 16 மில்லியன் மெட்ரிக் தொன்களே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. எனவே, இலங்கை தனது அரிசி தேவையில் மூன்றில் ஒரு பகுதியை இறக்குமதி செய்ய வேண்டும். உணவு பாதுகாப்பு தொடர்பான G7 உலகளாவிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் உலக வங்கியும் 14 பில்லியன் அமெரிக்க டொலர்களை உணவுப் பொருட்களைப் பெறுவதற்கு எமக்கு வழங்க முன்வந்துள்ளது. அவர்களுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அரசாங்கம் நல்லதொரு பாதுகாப்புத் திட்டத்தையும் முன்னெடுத்துள்ளது” என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

“இலங்கையின் பொருளாதார நெருக்கடி தவறான பொருளாதார கொள்கைகள் என்றாலும் உலகளாவிய நெருக்கடி மற்றொரு முக்கிய காரணமாகும். உக்ரைன் யுத்தம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் எங்களைப் பாதிக்கின்றன. பொருளாதாரத் தடைகள் எங்களைப் பாதிக்காது என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது. இருப்பினும், அது மூன்றாம் உலகத்தை பாதிக்கும். ரஷ்யாவும் உக்ரைனும் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கவேண்டும் மற்றும் பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும்” என்று அவர் மேலும் கூறினார்.

# இன்றும் நாளையும் 3 மணி நேர மின்வெட்டு

இன்று (18) மற்றும் நாளை (19), 03 மணித்தியாலங்களுக்கு மின்வெட்டை அமுல் படுத்துவதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில், A முதல் L வரை மற்றும் P தொடக்கம் W வரையான பகுதிகளுக்கு பிற்பகல் வேளையில் 1 மணித்தியாலம் 40 நிமிடங்களுக்கு இரவு வேளையில் அரை மணித்தியாலம் 20 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அதேநேரம் M,N,O,X,Y மற்றும் Z ஆகிய பகுதிகளில் காலை 5.30 மணி முதல் காலை 8.30 மணிவரையான காலப்பகுதியில் 03 மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

C C குழுக்களுக்கு காலை 6 மணி முதல் காலை 8.30 மணி வரையான காலப்பகுதியில் 02 மணித்தியாலங்கள், 30 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.



*மக்களால் கைப்பற்றப்பட்டிருந்து, மீண்டும் பாதுகாப்பு தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையில் தடயவியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு சமன் அபேசேகர)*

## பொருளாதார நெருக்கடியால் ஒத்திவைக்கப்பட்ட எல்.பி.எல்

*(ஏ. அகீல் சிஹாப்)*

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகவிருந்த மூன்றாவது லங்கா ப்ரீமியர் லீக் (எல்.பி.எல்) தொடரானது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையை கருத்திற்கொண்டு உடன் அமுலுக்கு வரும் அடிப்படையில் ஒத்திவைக்கப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான லங்கா ப்ரீமியர் லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரானது எதிர்வரும் முதலாம் திகதி முதல் 22ஆம் திகதி வரை கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய நகரங்களில் நடைபெறவிருந்தது. இவ்வாறான நிலையில் நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையை மேற்கோள் காட்டி, போட்டியை நடத்துவதற்கு ஏற்றதாக இல்லை என, போட்டியின் உரிமையாளரான இனோவேஷன் ப்ரொடெக்ஷன் க்ரூப் (ஐ.பி.ஜி) விடுத்த கோரிக்கையை அடுத்து, இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நேற்று ஊடக அறிக்கையின் மூலம் இந்த அறிவிப்பை விடுத்தது.

பெரும்பாலும் எதிர்வரும் டிசம்பர் மாதம் ஒத்திவைக்கப்பட்ட எல்.பி.எல் தொடர் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உஷ்

***கோட்டாபய பதவியை இராஜினாமா செய்த கடைசி நாட்களில் உறுதியளித்த எந்தவொரு உதவியையும் இந்தியா செய்யவில்லையென தகவல். இதனால் ராஜபக்ஷ சகோதரர்கள் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். ஜனாதிபதி பதவி கனவில் இருந்த பெசிலும் அவற்றை மறந்து அமெரிக்காவில் நிரந்தரமாக தங்கிவிட முடிவு செய்திருக்கின்றாராம்.***

## ஜனாதிபதி தெரிவை...

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையை தடுத்து, சமூக ஊடகங்களின் ஊடாக அழுத்தம் கொடுக்கும் நபர்கள் குறித்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாதுகாப்பு பணிப்புரை விடுத்துள்ளார்.

சமூக ஊடகங்கள் ஊடாக விடுக்கப்படும் பல்வேறு அச்சுறுத்தல் காரணமாக, ஜனாதிபதி தெரிவின்போது, தங்களுக்கு சுதந்திரமாக வாக்களிக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாக, பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த விடயத்தை ஆராய்ந்து பார்த்தே, பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் பாதுகாப்பு துறைக்கு இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இச் சம்பவம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரங்கள், சிறப்புரிமைய சட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றவியல் சட்டங்களின் கீழ் விசாரணை செய்யுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்திற்குச் சென்றுவருவதற்கும் நாடாளுமன்றத்தில் சுதந்திரமாக செயற்படுவதற்கும் சந்தர்ப்பம் இருக்கவேண்டும். அதனை மீறி செயற்படுவதானது, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீறுதல் மற்றும் அச்சுறுத்தல் விடுப்பதாக அமையும் என பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

## சஜித் கட்சியின்...

நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக முன்வருவோர், பதவி நிலை பாராது, பொதுமக்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்கும் வகையில் செயற்பட வேண்டும் எனவும் உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு மத்தியில், பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு சர்வகட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதனூடாகவே தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தற்போது சில மோசடி குழுக்களாக பிளவுபட்டுள்ளதாகவும் ஒரு தரப்பினருக்கு ஆதரவு வழங்குவதற்காக கட்சிக்குள் இணக்கப்பாடு இல்லை எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தமிழ்க் கட்சிகளின்...

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (17) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் நிசாந்தன் கோரிக்கைகளை முன்வைத்தார்.

பத்து அம்சக் கோரிக்கையில்,

ஸ்ரீலங்கா அரசினால் நீண்ட காலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும், ஸ்ரீலங்கா இராணுவத்தாலும், ஒட்டுக்குழுக்களாலும் கடத்தி காணாமலாக்கப்பட்ட தமிழ் உறவுகள் மற்றும் ஸ்ரீலங்கா இராணுவத்திடம் வலிந்து கையளிக்கப்பட்ட எமது போராளிகள், பொதுமக்கள் ஆகியோர் தற்பொழுது எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது ? என்று நீதியான முறையில் பொறுப்பு கூறவேண்டும், பல தசாப்தங்களாக தமிழர்களை அடக்கி, ஒடுக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டும், சிறிலங்கா அரசினாலும், அரச இயந்திரங்களினாலும் தமிழர் தாயகப் பகுதியில் திட்டமிட்டு நிகழ்த்தப்படும் பௌத்த மத அடையாளங்களை உருவாக்கும் செயற்பாடுகளை உடனும் நிறுத்துவதோடு, நிறுவப்பட்ட பௌத்த மத அடையாளங்களை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், தமிழர் தாயகத்தில் உள்ள எமது மக்களின் பூர்வீகக் காணிகளை ஸ்ரீலங்கா அரசு கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்துவதோடு, கையகப்படுத்திய காணிகளை மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், நாட்டின் ஏனைய மாவட்டங்களைவிட வடக்கு கிழக்கில் அதிகமான இராணுவம் நிலைகொண்டுள்ளது.

எனவே மேலதிகமாக காணப்படும் இராணுவத்தை எமது பகுதியை விட்டு வெளியேற்றுவதற்கான துரித நடவடிக்கை எடுக்கவேண்டும், தமிழர் தாயகத்தில் அரசியல், சமூக செயற்பாடுகளை முன்னெடுக்கும் தமிழ் செயற்பாட்டாளர்கள் மீது ஸ்ரீலங்கா புலனாய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்களை உடனும் நிறுத்தி செயற்பாட்டாளர்கள் முழு சுதந்திரத்துடனும், பாதுகாப்புடனும் செயற்படுவதை உறுதிப்படுத்த வேண்டும், ஊடகவியலாளர்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவம் மற்றும் புலனாய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள், தாக்குதல்களை உடனும் நிறுத்தி, எதிர்காலத்தில் ஊடகவியலாளர்கள் சுயாதீனமாக, சுதந்திரமாக, பாதுகாப்பாக செயற்படுவதை உறுதிப்படுத்த வேண்டும், வடகிழக்கு தமிழர் பகுதியில் எமது இளைஞர், யுவதிகளுக்கு அதிகமான வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்றவகையில் பெரியளவிலான தொழிற்சாலைகளை விரைவில் நிறுவுவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும், நீண்ட காலமாக நடாத்தப் படாமல் இருக்கும் மாகாணசபை தேர்தலை உடனடியாக நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றுள்ளது.

மேற்படி கோரிக்கைகளை ஸ்ரீலங்கா அரசிடம் இருந்து எழுத்து மூலமான உத்தரவை அனைத்து தமிழ்க் கட்சிகளும் பெற்றுக்கொள்ள வேண்டும். தொடர்ந்து ஸ்ரீலங்கா அரசின் வாய்மூல உத்தரவுகளை நம்பி ஏமாறும் போக்கிற்கு அனைத்து தமிழ்க் கட்சியினரும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றார்.

## எம்.பிக்களின் வீடுகள்...

ஒன்றிணைந்த பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர், வசந்த முதலிகே, நேற்றுமுன்தினம் இரவு ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்தின் போது, விடுத்த எச்சரிக்கை தொடர்பிலேயே பாதுகாப்பு துறையினர் இவ்வாறு விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வசந்த முதலிகே,

ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களித்து, அவரை ஜனாதிபதி கதிரைக்கு தெரிவு செய்ய யாராவது நினைத்தால் அவர்களுக்கு பதில் சொல்ல மக்கள் தயாராக உள்ளனர். மக்கள், தங்கள் வீடுகளுக்கு வந்து, நகரங்களுக்கு வந்து பதில் சொல்ல தயாராக உள்ளனர். எனவே, இனியும் யாரும் விளையாட வேண்டாம். ரணில் விக்ரமசிங்க உடனடியாக பதவி விலக வேண்டும்” எனக் கூறியுள்ளார். இதனையடுத்தே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் சுற்றி வளைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கருதி, அவர்களின் வீடுகளுக்கு பாதுகாப்பை அதிகரிப்பதற்கு உஷார் நிலையிலுள்ளனர்.

## சிறார்களுக்கு...

இருமல் மற்றும் தடிமன் போன்ற நோய் அறிகுறிகள் காணப்படும் என லேடி ரிஜ்வே சிறுவர் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ஜீ. விஜேசூரிய குறிப்பிட்டார்.

இதனிடையே, டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கையும் தற்போது வெகுவாக அதிகரிப்பதாக விசேட வைத்திய நிபுணர் ஜீ. விஜேசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

## வீடிழந்த பெரமுன ...

பதில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

சொத்துக்களை அழித்தவர்கள் தொடர்பில் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் எனவும், தமது ஆட்சியில் நாட்டில் வன்முறைகளுக்கு இடமளிக்கப்படாது எனவும் விக்ரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

அழிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பதில் ஜனாதிபதி ஏற்கனவே உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி பொதுஜன பெரமுன குண்டர்கள் அரங்கேற்றிய வன்முறைக்கு பதிலடியாக நாடளாவிய ரீதியில் பொதுமக்கள் திரண்டு, அமைச்சர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் என ஏறக்குறைய 80 பேரின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## மோசடி அரசியல்...

பிரதான எதிர்க்கட்சி மற்றும் பிற எதிர்க்கட்சிகளுடன் வரலாற்றில் முதல் கூட்டணி அரசாங்கத்தை கட்டியெழுப்புவதற்காகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தீர்மானித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.

மோசடி அரசியல் கலாசாரத்திற்கு முடிவு கட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் தனது ட்விட்டர் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான வேட்புமனுக்கள் 19ஆம் திகதி ஏற்கப்படவுள்ளன.

## பொதுஜன பெரமுன...

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்திலிருந்து சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக, பொதுஜன பெரமுன இளைஞர் அமைப்பின் தலைவர் டீ.வி.சானக்கவினால் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இதன்போது, ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடவுள்ள 7 உறுப்பினர்களின் பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, ரணில், டலஸ், சஜித், தம்மிக்க பெரேரா, பொன்சேகா, மைத்ரிபால, சுமந்திரன் போன்றோரின் பெயர்களை முன்வைத்த, டீ.வி.சானக்க, உங்களுக்கு விருப்பமானவரின் பெயரை பரிந்துரைக்குமாறு உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்போது, பெரும்பாலானோர் முன்னாள் அமைச்சர் டலஸ் அழகபெருமவிற்கு கட்சி ஆதரவளிக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

அதன்படி, நிறைவேற்று குழுவிலுள்ள 75 உறுப்பினர்களில், 54பேர் டலஸ் அழகபெருமவிற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதோடு, தாங்கள் யாருக்கும் வாக்களிக்காது, சுயாதீனமாக இருப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அறியமுடிந்தது.

இதேவேளை, வெற்றிடமாகவுள்ள ஜனாதிபதி பதவிக்கான தெரிவின்போது, தற்போதைய பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எந்த அடிப்படையில் தீர்மானித்துள்ளது என அதன் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கட்சிய பொதுச் செயலாளர் சாகர காரியவசமிடம் வினவியுள்ளார்.

எனினும், இதற்கு பதிலளித்துள்ள செயலாளர் சாகர காரியவசம், ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு கட்சி எடுத்துள்ள முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை எனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி நியமனம் எதிர்வரும் 20ஆம் திகதி இரகசிய வாக்கெடுப்பு மூலம் மேற்கொள் ளப்படும் என நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தசநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றித் தர இதய சுத்தியுடன் முன்வருபவரை ஆதரிக்க முன்வாருங்கள்

## முஸ்லிம் எம்.பிகளுக்கு ஹசன் அலி பகிரங்க ஆலோசனை



முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றித் தருவதற்கு இதய சுத்தியுடன் முன்வருபவரையே முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பில் நாடாளுமன்றத்தில் ஆதரிக்க வேண்டும் என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், சுகாதார துறை முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

இவரின் நிந்தவூர் இல்லத்தில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அரசியல் நடப்புகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து கூறியபோது, ஹசன் அலி மேலும் தெரிவித்தவை வருமாறு,

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டமை பெருமகிழ்ச்சியை தந்திருக்கின்றது. குறிப்பாக முஸ்லிம்கள் நிம்மதி பெருமூச்சு விடக் கூடியதாக இருக்கின்றது. முஸ்லிம்களின் மார்க்க விடயங்களில் தான்தோன்றித்தனமாக கை வைத்தவர் கோட்டாபய ராஜபக்ஷ. ஜனாஸா எரிப்பு நடவடிக் கைகள் அவருடைய மிலேச்சத்தனமான முஸ்லிம் எதிர்ப்பு - வெறுப்பு உணர்வை உலகத்துக்கே காட்டின.

ஒரே நாடு ஒரே சட்டம் என்று செயலணி அமைத்து, அதன் தலைவராக ஞானசார தேரரை நியமித்து, முஸ்லிம் மக்களுக்கு எதிரான உச்ச பட்ச அடக்கு முறையை கட்டவிழ்த்து விடுவதில் கண்ணாக இருந்தவர்.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாவையே ஆதரித்து இருந்தது. ஆனால் நாம் எழுந்தமானமோ, கண்மூடித்தனமாகவோ அவருக்குப் பின்னால் எடுபட்டு சென்றவர்கள் அல்லர்.

பல கட்ட பேச்சுகள் நடத்தி, முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை முன்வைத்து, அவற்றை நிறைவேற்றித் தருவார்கள் என்கிற எழுத்துமூல உத்தரவாதத்தைப் பெற்று, பொதுஜன பெரமுனவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து செய்துதான் ஆதரவு வழங்கினோம்.

ஆயினும் ஆட்சிக்கு வந்த பின்னர் குறைந்த பட்சம் எழுத்துமூல ஒப்பந்தத்தின்படிகூட நடக்கவில்லை என்று கண்டுகொண்டதை தொடர்ந்து, எமது ஆதரவை முழுமையாக விலக்கிகொண்டோம்.

69 இலட்சம் சிங்கள பெரும்பான்மை மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக தெரிவுசெய்தனர். ஆனால் அந்த வரலாற்றுத் தவறை அம்மக்களே திருத்தி சரி செய்துள்ளனர்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உச்ச பட்ச அதிகாரத்தை பெற்றுக்கொடுத்தவர்கள் முஸ்லிம் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதிகள். குறுகிய சுய இலாபங்களுக்காக இனத்தையே அடகு வைத்தவர்கள்.

அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு மீண்டும் கிடைத்திருக்கின்றது. வழமைபோல் அல்லாது இம்முறை சமூக அக்கறையுடன் அவர்கள் செயற்பட வேண்டும். பெருந்தலைவர் அஷ்ரப் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி தருவதற்கு அர்ப்பணிப்புடன் பாடுபட்டவர். அவருடைய காலத்துக்கு பின்னர் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் காணாமல் போயுள்ளன.

முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் என்பது வீதிகள் போட்டு தருவதை குறித்து நிற்கவில்லை. முஸ்லிம்களின் சுய நிர்ண உரிமை, பாதுகாப்பு, இருப்பு ஆகியன உறுதிப்படுத்தப்பட வேண்டும். முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்கள், அடக்குமுறைகள் ஆகியவற்றுக்கு முடிவு கட்டப்பட வேண்டும். அரச ஆதரவுடனான திட்டமிடப்பட்ட காணி கபளீகரங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை இதய சுத்தியுடன் நிறைவேற்றி தரக் கூடியவரை சரியாக அடையாளம் கண்டு, அவருடன் எழுத்துமூல ஒப்பந்தம் செய்து அவரை ஆதரிப்பதே ஜனாதிபதி தெரிவில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைக்கொள்ள வேண்டிய வியூகம் ஆகும். 20 இற்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இதில் கூடுதல் பொறுப்பு உள்ளது.

ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படுகின்ற நிலையில், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடு என்ன? என்பது முஸ்லிம் மக்களுக்கு முன்கூட்டியே அறிய கொடுக்கப்பட வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திட்டால் அதை முஸ்லிம் மக்களுக்கு பகிரங்கப்படுத்தவும் வேண்டும்.

கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை எமது மக்கள் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள்? என்பது குறித்த ஓரளவு அனுமானமும் எமது மக்களுக்கு இருக்கின்றது.

இம்முறையேனும் அவர்கள் சமூக பொறுப்புடன் நடந்துகொள்ள தவறினால் எமது மக்களால் விரைவில் விரட்டி அடிக்கப்படுவார்கள் என்பதில் மாற்றம் இல்லை. அதேநேரம் மற்றொரு சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சரியாகத்தான் செயற்பட்டு கொண்டு இருக்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

# போராட்டக்காரர்கள் தமிழர் அபிலாஷைகளையும் உள்வாங்கி புரிந்துகொள்ளுதல் அவசியமாகும்




"நாட்டின் அரசியல் கலாசாரத்தினை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதைப் புறந்தள்ளி செயற்படுவது முறையானதல்ல. மீண்டும் பழைய பாதையிலேயே போகக்கூடாது" என முன்னிலை சோஷலிச கட்சியின் பொது செயலாளர் குமார் குணரத்தினம் கூறுகிறார். இதுவே எமது கொள்கையாகவும் இருக்கிறது. இதனாலேயே நாம் எப்போதும் ராஜபக்ஷ அரசியல் கலாச்சாரத்தை எதிர்த்து வந்துள்ளோம்.

ஆனால், இந்த உத்தேச புதிய அரசியல் கலாசாரம், தமிழர் அபிலாஷைகளையும் வெறும் ஒருசில கோஷங்களுக்கு அப்பால் சென்று, கோட்பாடுகளாக உள்வாங்க வேண்டும். இதை போராட்டக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு குமார் குணரத்தினத்தின் முன்னிலை சோஷலிச கட்சியும், ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஒத்துழைக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. கூறினார்.

இதுபற்றி மனோ எம்.பி. மேலும் கூறியதாவது;

அரசியல் சட்டங்களுக்கு அப்பால் மக்கள் சக்தி உருவாகியுள்ளது. அந்த சக்தியின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டியது அதிகாரத்தில் உள்ளவர்களின் கடமையாகின்றது. அது உண்மை. ஆனால், இதே விதமான சட்டத்துக்கு அப்பால் சென்றுதான், கடந்த காலங்களில் தமிழர்கள் ஒடுக்கு முறையை சந்தித்தார்கள். இப்போதும் சந்திக்கிறார்கள்.

ஆகவே மக்கள் சக்தியை அடிப்படையாகக் கொண்ட மக்கள் சபைகள் உருவாக்கப்படட்டும். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு, தீர்வுகள் வரட்டும். நாமும் அவற்றை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

ஆனால், சட்டங்கள் வரமுன் அவற்றுக்கு அப்பால் முதலில் கோட்பாடுகள் வரவேண்டும். அவையே பின்னர் அரசியலமைப்பில் இடம்பெறும். இப்போது போராட்டக்காரர்கள் மத்தியில், தமிழர்களின் தேசிய அபிலாஷைகள் தொடர்பில், கோட்பாடுகளை நாம் காணவில்லை. எமக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு போராட்டக்கார அமைப்புகளின் ஆவணங்களில் ஒருசில மென்மையான கோஷங்களைத்தான் நாம் காண்கிறோம். ஆகவே, தமிழர் அபிலாஷைகளையும் கோஷங்களாக மட்டும் இல்லாமல், கோட்பாடுகளாக உள்வாங்க வேண்டும். இதற்கு மக்கள் விடுதலை முன்னணி, முன்னிலை சோஷலிசக் கட்சி ஆகிய அமைப்புகள் ஆவண செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலக வேண்டுமெனக் கோரி ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு நேற்றுடன் 100ஆவது நாளை எட்டியுள்ளது. காலிமுகத்திடல் போராட்ட களத்தில் தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள உருவங்களை படங்களில் காணலாம்.
(படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# ஹுனுபிட்டிய இரும்பு சேகரிப்பு நிலையத்தில் திடீர் தீப்பரவல்

### பாதுகாப்பு படையினர் கட்டுப்படுத்த நடவடிக்கை



வத்தளை, ஹுனுபிட்டிய பகுதியிலுள்ள இரும்பு சேகரிப்பு நிலையமொன்றில் நேற்று முன்திகம் (16) ஏற்பட்ட திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. தீப்பரலை கட்டுப்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், தீ ஏனைய பகுதிகளுக்கு பரவாமல் கட்டுப்படுத்தும் பணியில் கடற்படை வீரர்கள் ஈடுபடுகின்றனர்.

வத்தளை, ஹுனுபிட்டிய பகுதியிலுள்ள இரும்பு சேகரிப்பு நிலையமொன்றில் தீ பரவி வருவதாகவும், குறித்த தீயை அணைக்க கடற்படையின் உதவி தேவை என்றும் கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தினால் நேற்று முன்தினம் வெலிசர இலங்கை கடற்படைக் கப்பல் நிறுவனத்தின் செயல்பாட்டு அறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உதவிக்கான கோரிக்கைக்கு உடனடியாக பதிலளித்த கடற்படை, இலங்கை கடற்படை கப்பல் கெமுனு நிறுவனத்தின் தீயணைப்பு குழுவொன்று, தீயணைப்பு வாகனம் மற்றும் தண்ணீர் பவுசர் ஆகியவை தீயை கட்டுப்படுத்துவதற்காக வத்தளை, ஹுனுபிட்டிய பகுதியிலுள்ள குறித்த இரும்பு சேகரிப்பு நிலையத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

# மருத்துவ சமூகத்தை இழிவுபடுத்த முயல்வது வைத்தியர்களை புலம்பெயர வைத்துவிடும்

## மருத்துவர் யமுனாநந்தா கவலை

கடினமான காலத்தில் பொதுவெளியில் மருத்துவச் சமூகத்தை இழிவுபடுத்த முயல்வது பல மருத்துவர்களை இங்கிருந்து புலம்பெயர வைத்துவிடுமென யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எரிபொருட்களைப் பெறுவதற்காக சாதாரண பொதுமக்களுடன் மருத்துவச் சமூகமும் பாரிய நெருக்கடியினை எதிர்கொள்கின்றது. இந்நிலையில், பாரிய கடமைப் பழுவின் மத்தியிலும் எரிபொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்க அதிபரின் அனுமதியுடனான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட வைத்தியசாலை சமூகத்தினருக்கு எரிபொருள் நிரப்புவதற்கு சிலர் இடையூறாக இருந்தமையும் சமூக ஊடகங்களில் அவதூறாகவும் கருத்துக்களை உருவாக்குவதும் மிகவும் வேதனைக்குரியது.

வடபகுதியில் 1983ஆம் ஆண்டுகால அளவில் பல மருத்துவர்களும் மருத்துவ நிபுணர்களும் நாட்டுப்பிரச்சினை காரணமாக புலம்பெயர்ந்தனர். மிகவும் கடினமான முயற்சிகளின் பயனாகவே தற்போது யாழ். போதனா வைத்தியசாலை இலங்கையில் மிகவும் சிறந்த மருத்துவ நிபுணர்களுடன் சேவையினை ஆற்றிவருகின்றது. மிகவும் கடினமான இக்காலத்தில் பொதுவெளியில் மருத்துவச் சமூகத்தை இழிவுபடுத்த முயல்வது பல மருத்துவர்களை இங்கிருந்து புலம்பெயர வைத்துவிடும்.



இதனால் பாரிய சமூக வெற்றிடம் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது போன்று ஏற்படலாம். எனவே மருத்துவ சேவையின் முக்கியத்துவத்தினை உணர்ந்து இக்கடினமான சூழலில் மருத்துவச் சமூகத்திற்கு ஆதரவு அளியுங்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




பேருவளை மருதானை அல் அமானத் இஸ்லாமிய ஆரம்பப் பாடசாலையின் 2022ஆம் ஆண்டிற்கான எக்ஸ்போ கல்விக் கண்காட்சி அதிபர் பஸ்லா முர்ஸி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பாடசாலைப் பணிப்பாளரும் பேருவளை நகர சபை உறுப்பினருமான டில்சாத் அன்வரின் வழிகாட்டலின் கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இக்கண்காட்சி அங்குரார்ப்பண நிகழ்வில், இலங்கை வங்கி பேருவளை கிளையின் முன்னாள் முகாமையாளரும் பிரபல எழுத்தாளருமான ரி.எம்.ஸபா பிரதம அதிதியாக கலந்துகொண்டார். களுத்துறை நாகொட வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அதிகாரி டொக்டர் பசீர் முஸ்தபா, பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் பௌஸர் ஹுசைன் (நளீமி) உட்பட பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் பலரும் கலந்துகொண்டனர். (பீ.எம். முக்தார்)

# நடமாடும் எரிபொருள் விநியோக வேலைத்திட்டம் விரைவில்

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

முச்சக்கரவண்டிகள் மற்றும் ஜெனரேட்டர் தேவைகளுக்காக நடமாடும் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளாதாக மின்சார மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.




இதுதொடர்பில் விளக்கமளித்து ட்விட்டர் பதிவொன்றை இட்டே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அதில் அவர் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முச்சக்கரவண்டிகள், பொருள் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கேன்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொடுக்க மாற்று திட்டமொன்றை கையாள எதிர்பார்த்துள்ளோம். அதற்கமைய, மேற்குறிப்பிட்ட வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அப்பால், திறந்தவெளியில் நடமாடும் திட்டத்தினூடாக எரிபொருள் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

இந்த வேலைத்திட்டத்துக்காக டிரக் டிஸ்பென்சர்களை பயன்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

இந்த வேலைத்திட்டத்தை விரைவில் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்குமென கருதுகிறோம்.

தமிழன்
THAMILAN தமිලන්
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜூலை 18ஆம் திகதி, திங்கட்கிழமை

# ஒன்றுபட்ட சரியான தீர்வே வேண்டும்!

கோட்டாய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நாளைமறுதினம் இடம்பெறவுள்ளது.

நாடு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் மிகத் தீர்க்கமான முடிவுக்காக மக்கள் காத்திருக்கிறார்கள்.

பதில் ஜனாதிபதியும் பிரதமருமான ரணில் விக்ரமசிங்கவை பதவி விலகுமாறு காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் கோரினாலும் கூட, அரசியலமைப்பின் பிரகாரம் தற்போதைக்கு அது சாத்தியப்படாததொன்றாகும்.

ஏனென்றால் ஜனாதிபதி பதவி விலகும்பட்சத்தில் அதற்கு அடுத்தகட்டமாக அதிகாரம் மிக்கதாக பிரதமர் பதவியே காணப்படுகிறது. அத்துடன் பிரதமரே பதில் ஜனாதிபதியாக கடமையாற்றுவார் என கோட்டாபய ராஜபக்ஷ எழுத்துமூலமாக அறிவித்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இவ்வாறான சூழ்நிலையில், புதிய இடைக்கால ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கு நாளை மறுதினம் நாடாளுமன்றம் கூடி வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் போட்டியிடுவதாக அறிவித்துள்ளனர்.

இதற்கான வேட்புமனுத் தாக்கல் நாளைய தினம் இடம்பெறவுள்ளது.

நாடு முழுவதும் அரசியல் பொறிமுறை மாற்றம் குறித்து கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன. தற்போதைய பொறிமுறையில் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை என்பதான கருத்தே பரவலாக பேசப்படுகிறது.

இந்நிலையில், புதிய இடைக்கால ஜனாதிபதித் தெரிவும் பொறிமுறை மாற்றத்துக்கான சாதகத்தன்மையை வெளிப்படுத்தாத வகையில் அமைந்துள்ளதாகவே சொல்ல முடியும். ஏனென்றால், நாடு எதிர்நோக்கியுள்ள இக்கட்டான சூழ்நிலையில், மீண்டும் அரசியல் இருப்பை தக்கவைத்துக்கொள்ள அல்லது எதிர்கால அரசியலுக்கான காய்நகர்த்தலாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில், நாட்டு நிலைமையை அறிந்து அனைத்துத் தரப்பினரும் இணைந்து பொதுவான இணக்கப்பாட்டுக்கு வருவதே சிறந்ததாகும். அவ்வாறில்லாமல், ஜனாதிபதி பதவிக்கு பலர் போட்டியிடுவதனால், ஒருவர் தெரிவுசெய்யப்பட்டாலும் கூட ஏனையவர்கள் எதிர்காலத்தில் ஒத்துழைப்பார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

இடைக்கால ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பில் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. அறிவித்துள்ளார். எனினும் டலஸ் அழகபெருமவுக்கு ஆதரவு வழங்குவதே பொருத்தமானதாகும் என அக்கட்சியின் தவிசாளர் அறிவித்துள்ளார்.

இருவேறு விதமான கருத்துகளால் அக்கட்சிக்குள் முரண்பாடுகள் எழுந்துள்ளன. யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் கட்சிக்குள் பேசித் தீர்மானிக்கப்படவில்லையென பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டிருந்தார். ஆக, புதிய இடைக்கால ஜனாதிபதித் தெரிவிலும் அதன் பின்னரும் பொதுஜன பெரமுன கட்சிக்குள் பாரிய இழுபறிகள் ஏற்படப்போகின்றன என்பதை ஊகிக்க முடிகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான ஆதரவு இல்லாதபோதிலும், தமிழ் பேசும் கட்சிகள் தமக்கு ஆதரவளிக்கும் என நம்புகிறார்.

மேலும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையானோர் தமக்கு வாக்களிப்பர் என டலஸ் அழகபெரும கருத்து வெளியிட்டுள்ளார். ஜனாதிபதி பதவிக்கு ஏற்கனவே அவருடைய பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளதால் பொதுஜன பெரமுனவினதும் அக்கட்சி தலைமை வகிக்கும் கூட்டணியிலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்களதும் ஆதரவு தமக்கு உண்டு என டலஸ் நம்புகிறார்.

மறுபுறம், நாடாளுமன்றத் தேர்தலில் குறிப்பிடத்தக்களவு மக்கள் ஆணை தமக்கு இல்லாதபோதிலும் ஏனைய வேட்பாளர்கள் மீது நம்பிக்கையீனம் காரணமாக இடைக்கால ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க போட்டியிடப்போவதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை, புதிய இடைக்கால ஜனாதிபதியை தெரிவுசெய்யும் நாடாளுமன்ற வாக்கெடுப்பின்போது எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்கப்போவதில்லையென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

பதில் ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்கவுக்கு மக்கள் ஆணை கிடையாது என்றும் ஜனாதிபதியாக பதவி வகிப்பவர் நாட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருக்க வேண்டும் எனவும் சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் பலர் போட்டியிடுவதால் நெருக்கடி நிலைமை மேலும் அதிகரிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையில், நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கப்போகும் மிக முக்கியமான வாக்கெடுப்பு தொடர்பில் அனைத்து கட்சிகளும் விட்டுக்கொடுப்புடன் மக்கள் நலன் கருதி செயற்பட வேண்டியதே அவசியமாகும். பிரிவினையுடன் அரசியல் இலாபத்துக்காக செயற்பட முயலும் பட்சத்தில் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்பதை அரசியல் தலைவர்கள் உணர வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

# தப்பியோடலும் பதவி துறப்பும்; கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சி



இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இறுதியில் பதவியைத் துறந்துவிட்டார். ஆனால், அவர் என்ன செய்வாரென்று நாட்டு மக்களை இரு நாட்களாக ஊகிக்கவைத்த பின்னரே அவ்வாறு செய்திருக்கிறார். நெருக்கடிக்குள்ளான இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி விமானப்படை விமானம் மூலம் நாட்டை விட்டு தப்பியோடி, மாலைதீவைச் சென்றடைந்து அங்கிருந்து சிங்கப்பூருக்கு போயிருக்கிறார். இன்னொரு நாட்டுக்கு செல்லும் நோக்குடனேயே அவர் சிங்கப்பூரில் தங்கியிருக்கிறார் போலும்.

இந்த நாடுகளில் எந்தவொன்றினாலும் திருப்பி அனுப்பப்பட்டுவிடக்கூடும் என்ற சந்தேகத்தில் கோட்டாபய பதவி துறப்பதாக உறுதியளித்த திகதியில் (ஜூலை 13) அவர் பதவி விலகல் கடிதத்தை கையளிக்கவில்லை. வியாழக்கிழமை மாலையே அந்த கடிதத்தை அவர் அனுப்பிவைத்தார். பாதுகாப்பான ஒரு இடத்தைச் சென்றடையும்வரை வழக்குகள் தொடரப்படுவதில் இருந்து தனக்கு இருந்த விதிவிலக்கு உரிமையை இழக்காமல் இருப்பதற்காகவே பதவி விலகலை அவர் தாமதித்தார் என்பது இப்போது தெளிவாகிறது. அவருக்கு எதிராக மக்கள் மத்தியில் பரவலாக காணப்படும் சீற்றம் காரணமாக பதவியின் பாதுகாப்பு இல்லாமல் கொழும்பில் இருப்பது அவருக்கு ஒரு தெரிவாக இருந்திருக்க முடியாது.

பதிலாக, தான் நாட்டில் இல்லாத நேரத்தில் தனது கடமைகளைச் செய்வதற்கு அரசியலமைப்பு ஏற்பாடுகளைப் பயன்படுத்தி பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை கோட்டாபய பதில் ஜனாதிபதியாக நியமித்தார். புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படும்வரை பதில் ஜனாதிபதியாக பிரதமர் கடமையாற்றுவதற்கு அனுமதிக்கும் ஏற்பாடுகள் அரசியலமைப்பில் இருப்பதால் பதவி விலகுமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு விக்ரமசிங்க இப்போது பதிலளிக்கக்கூடிய சாத்தியமில்லை. புதிய ஜனாதிபதியை முறைப்படி தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றம் விரைவில் கூட்டப்படவிருக்கும் அதேவேளை, மக்கள் கிளர்ச்சி தணியுமா என்ற கேள்வி எழுகிறது. ஏனென்றால் கோட்டாபயவைப் போன்று அபகீர்த்திக்குள்ளானவராக விக்ரமசிங்கவையும் நோக்கும் போராட்டக்காரர்கள் அவரையும் பதவி விலகுமாறு கேட்ட வண்ணம் இருக்கிறார்கள்.

கிளர்ச்சி தீவிரமடையக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் விக்ரமசிங்க சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இராணுவத்தை கேட்டிருக்கிறார். ஒழுங்கு என்பது இரத்தக் களரியின் மூலம் கொண்டுவரப்படுவதல்ல. மோதல் தவிர்க்கப்படவேண்டும். மக்களின் கோரிக்கைகளை கவனிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பொருளாதார நெருக்கடி தங்களது அன்றாட வாழ்வில் ஏற்படுத்திய அவலத்தினால் ஆவேசமடைந்த இலங்கை மக்கள் வெளிக்காட்டிய முன்னென்றும் இல்லாத நியாயமான சீற்றத்தையும் துணிச்சலையும் கண்டு உலகம் வியப்படைந்திருக்கிறது. சிவில் சமூகம் ஒன்றிணைந்த நிலையில், இதை பேராசையும் மெத்தன உணர்வும் கொண்ட அரசியல் வர்க்கம், அவலங்கள் ஐக்கியப்படுத்திய மக்களினால் அடக்கப்பட்டிருக்கிற ஒரு புரட்சிகர தருணம் என்று நோக்குவதே பொருத்தமானதாகும். எதேச்சாதிகாரத் தலைவர்கள் மற்றும் அதிகாரவெறிப் பிடித்த அரசியல்வாதிகளையும் பொறுத்தவரை இது ஒரு உண்மையின் தருணமாக இருக்கின்ற அதேவேளை, இலங்கையின் தலைவர்கள் இதிலிருந்து ஏதாவது படிப்பினைகளைப் பெற்றிருக்கிறார்களா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

ஆட்சியாளர்களின் வாசஸ்தலங்களையும் அலுவலகங்களையும் போராட்டக்காரர்கள் கைப்பற்றியிருக்கும் காட்சிகள் தீவிரமாக பரவுகின்ற அதேவேளை மறுபுறத்தில் அதிகாரத்துக்கான போட்டியும் ஆரம்பித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆட்சி மாற்றம் ஒன்று அரசியலமைப்பு மாற்றங்களையும் கொள்கைச் சீர்திருத்தங்களையும் கொண்டுவரக்கூடியதும் அரசியல் நோக்கங்களுக்காக மக்களின் நலன்கள் தாரைவார்க்கப்படுகின்ற போக்கு மாற்றியமைக்கப்படக்கூடியதுமான புதிய ஒழுங்கொன்றை கொண்டுவரும் என்று இலங்கையர்கள் எதிர்பார்க்கக்கூடும்.

அடுத்த ஜனாதிபதி இந்த நியாயபூர்வமான அபிலாஷைகளை அங்கீகரித்து, இதுகாறும் உள்ள நிலையைப் பேணுவதையும் தற்போதைய நெருக்கடிக்கு நாட்டை இட்டுச்சென்ற தவறான செயற்பாடுகளை மூடிமறைப்பதையும் பதவியில் இருந்தபோது தவறான முறையில் குவித்த செல்வத்தை பாதுகாப்பதையும் தவிர்த்து செயற்படவேண்டும்.

***( த இந்து, ஆசிரிய தலையங்கம், 15 ஜூலை 2022)***

# கருத்தொருமிப்பின் அடிப்படையில் புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட வேண்டும்

## வலியுறுத்துகிறது தேசிய சமாதானப் பேரவை

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

தேசிய தேர்தல்களை நடத்தி மக்களிடம் இருந்து புதிய ஆணையைப் பெறக்கூடிய நேரம் வரும்வரை கருத்தொருமிப்பின் அடிப்படையில் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்யவேண்டியது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் கடமையாகும் என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியிருக்கிறது.

கலாநிதி ஜெகான் பெரேராவை நிறைவேற்று பணிப்பாளராகக் கொண்ட சமாதானப் பேரவை இது தொடர்பில் வெளியிட்டிருக்கும் அறிக்கையின் விபரம் வருமாறு,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் மீதே தற்போது சகலரது கவனமும் திரும்பியிருக்கிறது. இது வழமையான ஒரு நடைமுறை அல்ல. ஆனால், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையை பதவி விலக நிர்ப்பந்தித்து, அவர்களினால் மூன்று வருடங்களுக்கு முன்னர் தேர்தல்களில் பெறப்பட்ட ஆணைகளை வலுவிழக்கச் செய்த ‘அறகலய’ என்று அறியப்பட்ட முன்னென்றும் இல்லாத வகையிலான மக்கள் கிளர்ச்சியின் விளைவான ஒன்றாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இது அரசியலமைப்பினால் (சரத்து 4) அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் அதிகாரமேயாகும்.

நாட்டை பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் தார்மீக ரீதியிலும் பாழ்படுத்திவிட்ட தனிநபர்களுக்கும் முறைமைகளுக்கும் எதிரான ஒரு மக்கள் கிளர்ச்சியின் கள யதார்த்தங்களை அலட்சியம் செய்து, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆதரவை திரட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் பிரசாரங்களும் பேச்சுக்களும் தேசிய சமாதானப் பேரவையை பெரும் கவலையடையச் செய்திருக்கின்றன.

மக்கள் கிளர்ச்சியினால் உண்மையில் வலுவிழக்கச் செய்யப்பட்ட ஆணையொன்றை வைத்துக்கொண்டே புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான இந்த தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, நாட்டை ஆட்சிசெய்வதற்கான தார்மீக நியாயப்பாட்டை இழந்துவிட்ட ஆளுங்கட்சியினதும் முன்னாள் அரசாங்கத்தினதும் உறுப்பினர்களுக்கும் இது பொருந்துகிறது.

இத்தகையதொரு சூழ்நிலையில், தேசிய தேர்தல்களை நடத்தி மக்களிடமிருந்து நேரடியாக புதிய ஆணையைப் பெறக்கூடிய நேரம் வரும்வரை கருத்தொருமிப்பின் அடிப்படையில் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கு தீர்மானிக்கவேண்டியது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சித் தலைவர்களின் கடமை என்று நாம் நம்புகிறோம்.

புதிய ஜனாதிபதி சகல கட்சிகளுடனும் சேர்ந்து பணியாற்றக்கூடியவராகவும் நாட்டில் உள்ள நிபுணர்களுடனும் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனும் பணியாற்றக்கூடியவராகவும் எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டு மக்களுக்கு ஏற்புடையவராகவும் இருக்கவேண்டும் என்றும் நாம் நம்புகிறோம்.

ஆட்சிமுறை என்பது வெறுமனே அதிகாரத்தை செயற்படுத்துவது மாத்திரமல்ல, ஒவ்வொருவரினது உரிமைகளையும் சகலரினதும் நல்வாழ்வையும் பேணிப்பாதுகாப்பதுமாகும்.

ஜனாதிபதி சகல குடிமக்களினதும் குறிப்பாக மலினப்படுத்தப்பட்டுவிட்ட, எதிர்காலத்துக்கு முகங்கொடுக்கவேண்டியவர்களாக இருக்கும் இளைஞர், யுவதிகளின் நம்பிக்கையைப் பெறவேண்டிய தேவை இருக்கிறது. அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி, சாத்தியமானளவு விரைவாக நாடாளுமன்ற தேர்தலுக்கும் மாகாணசபைகள் தேர்தலுக்கும் திகதிகளை நிர்ணயிப்பதே புதிய ஜனாதிபதியின் உடனடிக் கடமைகளாகும்.

## இன்றைய நாளில்...

- 1916 – யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பெரும் சூறாவளியில் பலர் உயிரிழந்தனர். வீடுகள், மற்றும் பல தொலைத்தொடர்பு சாதனங்கள் சேதமடைந்தன.
- 1966 – மனித விண்வெளிப்பறப்பு: நாசாவின் ஜெமினி 10 விண்கலம் ஏவப்பட்டது.
- 1968 – இன்டெல் நிறுவனம் மவுண்டன் வியூ, கலிபோர்னியாவில் நிறுவப்பட்டது.
- 1982 – குவாத்தமாலாவில் பெண்கள், குழந்தைகள் உட்பட 268 பழங்குடியினர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1996 – முல்லைத்தீவு இலங்கைப் படைமுகாம் விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டது. 1200 படையினர் கொல்லப்பட்டனர்.

## நக்கல் நமசிவாயம்



# இந்தியாவினால் வழங்கப்பட்ட உரத்தை பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்தலாம்

## இரசாயன ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய உரச் செயலகம் அறிவிப்பு

இந்திய அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட உரத் தொகையை விவசாயத்துக்கு பயன்படுத்திக்கொள்ள முடியுமென தேசிய உரச் செயலாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட உரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம், 0.9 சதவீதம் பையூரெட் காணப்படுவதாக தேசிய உர செயலகம் நேற்று முன்தினம் (11) அறிவித்துள்ளது.





இந்த உர தொகை தொடர்பில் தேசிய உர செயலக காரியாலயம் இந்நாட்டு இரசாயன ஆய்வுக்கூடத்தினூடாக தர அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னர், இந்த உரத் தொகை தொடர்பில் 03 சர்வதேச இரசாயன ஆய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த ஆய்வு அறிக்கைகளில் 0.65 சதவீதம் பையூரெட் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

பொதுவாக இலங்கையில் பயன்படுத்தப்படும் யூரியாவில் 1 சதவீத பையூரெட் காணப்படும். இந்தியாவினால் வழங்கப்பட்டுள்ள யூரியாவில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் நெல் உள்ளிட்ட பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்துவதில் பிரச்சினை எதுவும் இல்லை எனவும் தேசிய உரச் செயலக காரியாலயம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு அறிவித்துள்ளது.

இந்திய கடனுதவி வேலைத்திட்டத்துக்கமைய 65 ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியா உரத் தொகையின் முதல் கட்டமாக 44 ஆயிரம் மெட்ரிக் தொன் உரம் கடந்த 09ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்திருந்தது.

இந்த உரத்தொகை கடந்த 10ஆம் திகதி கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து இலங்கைக்கு கையளிக்கப்பட்டது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவினால் இந்த உரத்தொகைக்கான ஆவணங்கள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த விவசாய அமைச்சர்,

நெருக்கடி நிலைமையை சந்தித்துள்ள இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கத்தினால் யூரியா உரம் பெற்றுக்கொடுக்க எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் இந்திய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி கோட்டா விமானப்படை தளபதிக்குரிய வீட்டிலிருப்பதாக வெளியாகும் தகவல் போலியானது

### ஊடகப்பிரிவு விளக்கம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவுக்கு செரந்தமான பிரத்தியேக இல்லமொன்றில் தங்கியிருப்பதாக சமூக ஊடகங்களில் வெளியாகும் தகவல்களில் எந்த உண்மைத் தன்மையும் இல்லை எனவும், அதனை முற்றாக மறுப்பதாகவும் விமானப்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளித்து நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள விமானப் படை ஊடகப்பிரிவு, அதில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவுக்கு சொந்தமான பிரத்தியேக இல்லமொன்றில் தங்கியிருப்பதாக முன்னாள் பொலிஸ் அதிகாரியான அஜித் தர்மபாலவினால் வெளியிடப்பட்ட குரல் பதிவொன்று சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது.

இந்த குரல் பதிவில் குறிப்பிடப்படும் எந்தவொரு விடயமும் உண்மையில்லை.

இது விமானப்படை மற்றும் விமானப்படை தளபதிக்கு இழிவை ஏற்படுத்தும் வகையிலான செயலாகும்.

விமானப்படைக்கு எதிராக பொது மக்கள் மத்தியில் வைராக்கியத்தையும் குரோதத்தையும் ஏற்படுத்தும் சந்தர்ப்பவாத நோக்கிலான செயற்பாடு எனவும் விமானப் படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## முந்தல் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய தீ மிதிப்பு நிகழ்வு இன்று



(உடப்பு நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க முந்தல் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய மகோற்சவத்தின் தீ மிதிப்பு நிகழ்வு இன்று (13) இரவு 8.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான நிகழ்வுகள், தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 18 நாட்களாக இடம்பெற்றுவரும் இவ்விழா முழுக்க முழுக்க மகா பாரதக் கதையை நினைவுபடுத்தும் ஒரு விழாவாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இரவு 8 மணியளவில் இடம்பெறும் தீமிதிப்பில் முதலில் பூசகர் குழந்தைவேல் சுரேந்திரன் தனது அக்கினிக் கரகத்துடன் முதற்பாதத்தை வைத்து தீ மிதிப்பார். அதன் பின்னர் பக்த அடியார்கள் ஒவ்வொருவராக தீ மிதிப்பில் கலந்துகொண்டு தீ மிதிப்பார்கள். இந்நிகழ்வு சுமார் 40 நிமிடங்கள் இடம்பெறும்.

## ஆழ்கடலில் விபத்துக்குள்ளான மீனவர்கள் மூவர் மீட்பு





மஹா இராவணன் கலங்கரை விளக்கத்திலிருந்து 174 கடல் மைல்கல் தொலைவில் இலங்கைக்கு தென் கிழக்கு திசையின் ஆழ்கடல் பகுதியில் விபத்துக்குள்ளான மீன்பிடி படகில் உயிர் அச்சுறுத்தலுக்குள்ளான மீனவர்கள் மூவர், கடற்படை தலைமையகத்திலுள்ள கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மைய அதிகாரிகள் ஒருங்கிணைந்து, பாதுகாப்பாக நேற்று முன்தினம் (11) மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 02ஆம் திகதி வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தில் 03 மீனவர்களுடன் மீன்பிடி நடவடிக்கைக்கு வெளியேறிய IMUL – A-0301 MTR என்ற மீன்பிடிப் படகே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக மீன்பிடி மற்றும் நீர்வள பாதுகாப்பு திணைக்களத்தினால் கடற்படை தலைமையகத்திலுள்ள கொழும்பு, கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவுறுத்தலுக்கு உடனடியாக செயற்பட்ட கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மைய அதிகாரிகள் அவர்களை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த விபத்திலிருந்து மீட்கப்பட்ட மூவரையும் காலி துறைமுகத்துக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

## குருநாகல் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு பூட்டு

எரிபொருள் பிரச்சினையின் காரணமாக குருநாகல் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை மூடுவதற்கு அந்த வைத்தியசாலையின் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு மாத்திரம் சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக வைத்தியசாலையில் நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

அந்த வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தயாநந்த பண்டார கருத்து தெரிவிக்கையில்,

வைத்தியசாலையின் நடவடிக்கைகள் தற்போது வரையறுக்கப்பட்டுள்ளன. தங்கி சிகிச்சைப்பெற்று வரும் நோயாளர்களுக்கு மாத்திரமே சிகிச்சை வழங்கப்படுகிறது. எரிபொருள் பிரச்சினை பாரதூரமான சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் 90 சதவீதமான விசேட வைத்திய நிபுணர்கள் இந்த மாகாணத்தைச் சேரந்தவர்கள் அல்ல.

அநேகமானவர்கள் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவ்வாறு இல்லாவிட்டால் கொழும்பிலிருந்தும் கடமைக்காக வைத்தியர்கள் இங்கு வருகிறார்கள்.

நாங்கள் கடமைகளுக்கு பஸ் அல்லது புகையிரதத்திலேயே கடமைக்கு வருகிறோம். கடமைக்கு வந்து ஒரு வாரத்துக்கு மேலாக எங்களால் வீட்டுக்கு மீண்டும் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

நாட்டிலுள்ள நிலைமையின் காரணமாக சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி, வியாழன் அல்லது வெள்ளிக்கிழமைகளில் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லாத நிலை நிலவுகிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரி கைது!

நாட்டில் கடந்த 09ஆம் திகதி மஹரகமவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் இணைந்துகொண்ட பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.


இந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று முன்தினம் (11) அதிகாலை காலிமுகத்திடல் போராட்டப் பகுதியில் வைத்தே கோட்டை பொலிஸ் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.


இந்த அதிகாரி பொலிஸ் போக்குவரத்து பிரிவில் பணிபுரியும் கான்ஸ்டபிள் ஒருவர் ஆவார். அதிகாரி பொலிஸ் சீருடையுடன் காலணிகளை அணிந்து சந்தேகத்திற்கிடமான வகையில் அங்கு தங்கியிருந்தமையினால் கைது செய்யப்பட்டுள்ளதாக கோட்டை பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவருக்கு பொலிஸார் பிணை வழங்கி விடுவிக்கப்படுவார் என்றும் அந்த உயர் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.


எனினும், பொலிஸ் தலைமையகம் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளது என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

## பிரதமர் ஊடகப்பிரிவிலிருந்த உபகரணங்கள் திருட்டு









அலரிமாளிகையின் ஊடகப்பிரிவிலிருந்த உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊடகப் பிரிவிலிருந்த இரு மடிக்கணினிகள், ஒளிப்பதிவு கெமரா மற்றும் மேலுமொரு கெமரா என்பன இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டதன் பின்னர் அலரிமாளிகைக்கு செல்லவில்லை என்பதுடன், பிரதமர் ஊடகப்பிரிவில் மாத்திரம் அலரிமாளிகையின் வளாகத்தில் தனியாக கட்டடமொன்று நிர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 09ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரிமாளிகைக்குள் நுழைந்ததன் பின்னரே இந்த உபகரணங்கள் காணாமல்போயுள்ளதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அலரிமாளிகையின் சுவர், கதவு என்பவற்றை உடைத்து, அங்கிருந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.







கடந்த 9ஆம் திகதிய மக்கள் எழுச்சிப் போராட்டத்தினால் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம், ஜனாதிபதியின் அலுவலகம் மற்றும் பிரதமரின் அலரிமாளிகை என்பன மக்கள் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன. அந்த வகையில் நேற்றும் (12) அலரிமாளிகையை மக்கள் பார்வையிடுவதற்காக வந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. இதேவேளை இளைஞர்கள் உணவு சமைப்பதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

ஸ்ரீ லங்கா මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

## 12.07.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 127 15 8 | 138 6 01 |
| கனேடியன் டொலர் | 161 76 3 | 174 251 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 0703 | 44 1514 |
| யூரோ | 245 0234 | 26 6 46 |
| ஜப்பான் யென் | 1 477 | 1 5861 |
| சிங்கப்பூர் டொலர் | 141 3602 | 152 381 |
| ஸ்ரேலிங் பவுன் | 311 414 | 328 818 |
| சுவிஸ் பிரான்ங் | 250 3843 | 266 4343 |
| ஐ.அ.டொலர் | 245 8447 | 257 2 00 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 1580 |
| குவைட் | குவைட் தினார் | 0,061 3810 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 3 18 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 1732 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0276 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1451 |

# மலையக மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து ஜனாதிபதி தெரிவில் ஆதரவளிக்க வேண்டும்

## அரசியல்வாதிகளிடம் புத்திஜீவிகள் கோரிக்கை

(யோ.தர்மராஜ்)

புதிய ஜனாதிபதிக்கான தெரிவு இடம் பெறவுள்ள நிலையில், பெருந்தோட்ட அரசியல் தலைவர்கள் தொலைநோக்குடன் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கக்கூடிய ஒருவருக்கு ஆதரவை வழங்கவேண்டும் என மலையக புத்திஜீவிகளும் கல்விமான்களும் வலியுறுத்தியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவி விலகியதையடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கான புதிய ஜனாதிபதி ஒருவரை தெரிவுசெய்வதற்காக 20ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இதற்கு, பதில் ஜனாதிபதியாகவுள்ள ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகபெரும மற்றும் அநுரபிரியதர்ஷன யாப்பா ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

இந்த நிலையில், 20ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தும்போது, மலைய அரசியல்வாதிகள் எழுந்தமான முறையிலும் அரசியல் தந்திரங்களுக்கு அமையவும் ஆதரவளிக்காது, மலையக மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து அதற்கு தீர்வை தரும் ஒருவருக்கே ஆதரவளிக்க வேண்டும் என பெருந்தோட்ட மக்களும் புத்திஜீவிகளும் வலியுறுத்துகின்றனர்.

அதன்படி, பெருந்தோட்ட மக்களின் சம்பளப் பிரச்சினை, பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத் திட்டங்கள் வழங்கலின்போது முன்னுரிமை அளிக்கப்படாமை, கல்வி பிரச்சினைகளுக்கான தீர்வு, காணி உறுதி பத்திர பிரச்சினைகள் உள்ளிட்ட அடிப்படை பிரச்சினைகளை முன்வைத்து, அதற்கு தீர்வு வழங்கக்கூடிய ஒருவருக்கே மலையக அரசியல்வாதிகள் ஆதரவளிக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# பதுளை எரிபொருள் நிலையத்தில் முரண்பாடு;
## காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதி

பதுளை எரிபொருள் வரிசையில் திடீரென வந்து மோட்டார்சைக்கிள் ஒன்றினை நுழைப்பதற்கு முற்பட்ட இளைஞனுக்கும் ஏற்கனவே வரிசையில் காத்திருந்த இளைஞனுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டினால் படுகாயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

வரிசையில் இடையில் நுழைந்த இளைஞன் அருகில் இருந்த வீதிக்கடவையை உடைத்து, வரிசையில் ஏற்கனவே காத்திருந்த இளைஞனின் தலையில் பின்புறம் தாக்கியதால் பலத்த காயமடைந்த இளைஞன், தற்போது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனால் இரு குழுக்களுக்கு இடையில் பாரிய மோதல் சம்பவம் தற்போது ஏற்பட்டுள்ளது.

ஆனால் பொலிஸார் இப்பிரச்சினையில் தலையிடுவதை தவிர்த்து, தமது வாகனங்களுக்கு எரிபொருள் முழுமையாக நிரப்பிச் செல்கின்றனர்.

# இந்திய அரசின் நன்கொடை கிடைக்கவில்லை;
## ஹப்புகஸ்தனை தோட்ட மக்கள் குற்றச்சாட்டு

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள ஹப்புகஸ்தனை தோட்ட திபட்டன் பிரிவில் உள்ள 44 குடும்பத்தைச் சேர்ந்த 102 குடும்ப அங்கத்தவர்களுக்கும் டிக்கோயா தோட்டத்தை சேர்ந்த 120 குடும்பத்தைச் சேர்ந்த 312 குடும்ப அங்கத்தவர்களுக்கும் இன்றுவரை குறித்த இந்திய அரசின் நிவாரணப் பொதிகளை பெற்றுக்கொடுக்கவில்லை என குற்றம் சுமத்துகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட இரு தோட்ட தொழிலாளர்கள் தாங்கள் இணைந்துள்ள தொழிற்சங்கங்களுக்கு எடுத்துக் கூறியதுடன், கிராம உத்தியோகத்தரிடம் கூறியும் இந்த பொருட்கள் கிடைக்கவில்லை என ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து, இப்பொருட்களை பெற்றுத்தர ஆவண செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# மஸ்கெலியா எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் ஒரு மாதத்திற்கும் மேலாக எரிபொருள் இல்லை

(மஸ்கெலியா நிருபர்)



எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் கடந்த ஒரு மாதமாக மஸ்கெலியா எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு எந்த வித எரிபொருளும் கிடைக்கவில்லை. இதனால் சாரதிகள் மற்றும் பொது மக்களின் இயல்பு வாழ்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

மஸ்கெலியா நகரை சுற்றி சுமார் 70 ஆயிரம் மக்கள் வாழ்கின்றார்கள். இங்கு ஐ.ஓ.சி. பெற்றோல் நிலையம் இல்லாது மிகப் பெரிய பின்னடைவை காட்டுகின்றது. மஸ்கெலியாவிலிருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்தில் ஹட்டன் நகரில்தான் இரண்டு ஐ.ஓ.சி. பெற்றோல் நிலையம் காணப்படுகின்றது.

எனவே, மஸ்கெலியா வாழ் மக்களின் இயல்பு வாழக்கை முற்றாக பாதிக்கப் பட்டுள்ளதாக பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோக் தெரிவித்துள்ளார்.

மஸ்கலியா எரிபொருள் நிலையத்துக்கு பெற்றோல் இன்னும் கொண்டு வராமை மஸ்கெலிய பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் அசமந்த போக்கா அல்லது அரசாங்கத்தின் கவனக் குறைவா?

தயவுசெய்து மஸ்கெலியா நகருக்கு பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் கேஸ் கொண்டு வருவதற்கு சம்பந்தபட்ட அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோக் சம்பந்தபட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# நுவரெலியாவில் எரிவாயு விநியோகத்தில் அமைதியின்மை;
## இரு நாட்கள் வரிசையில் காத்திருந்ததால் மக்கள் கோபம்

(க.கிஷாந்தன்)





நுவரெலியா பிரதான நகருக்கு கடந்த வியாழக் கிழமைக்கு பின்னர் இன்றைய தினம் லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தால் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் அனுப்பிவைக்கப்படும் எனவந்த அறிவிப்பின் பின்னர் இரண்டு நாட்கள் வரிசையில் இருந்தவர்களுக்கும், விற்பனை முகவர்களுக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டது.

விற்பனை முகவர் இன்றைய தினம் கூப்பன் முறையில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படும் என அறிவித்ததன் பின்னர் கூப்பன் இன்றி வரிசையில் காத்திருந்தவர்களுக்கும் விற்பனை முகவர்களுக்கும் இடையில் இவ்வாறு அமைதியின்மை ஏற்பட்டது.

எனினும் இதன்போது, நுவரெலியா பொலிஸாரின்தலையீட்டில், நிலைமையை கட்டுபாட்டுக்குள் கொண்டுவந்ததுடன் கடந்த வியாழக்கிழமை வரிசையில் காத்திருந்து இறுதியில் கிடைக்காத 20 நபர்களுக்கும் ஏனையவை கூப்பன் முறையில் விநியோகம் செய்யப்படும் என அறிவித்து, பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்க நடவடிக்கை எடுத்தனர்.

# வடமாகாண எரிபொருள் நிரப்பு நிலையங்களது உரிமையாளர்கள் இணையம் அங்குரார்ப்பணம்








(மு.தமிழ்ச்செல்வன்)

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் இயங்கும் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களை உள்ளடக்கிய எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் வடமாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் இணையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாணம் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் இந்த இணையத்துக்கான நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.


இதன் தலைவராக பருத்தித்துறை மீனவ நண்பன் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் திரு.ஜெய்சங்கர் தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராக நாவற்குழி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் சு.சுதர்சன், பொருளாளராக அளவெட்டி மல்லாகம் கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தின் சார்பில் கூட்டுறவுச்சங்க தலைவர் கணேசலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தொடர்ந்து உபதலைவர் உப செயலாளர் ஆகியோர் ஏனைய மாவட்டங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டனர். இதனை விட நிர்வாக உறுப்பினர்களாக ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்து ஒவ்வொரு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோர் விருந்தினர்களாக வந்திருந்தனர். எதிர்காலத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் கூட்டிணைவுச் செயற்பாட்டின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எரிபொருள் விநியோகிப்பது தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. எதிர்காலத்தில் இந்த இணையத்தின் காத்திரமான செயற்பாடுகளை அவதானிக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

# முறையான திட்டமிடல் இன்மையால் நாட்கணக்கில் வெயிலில் நின்ற சுகாதாரப் பணியாளர்கள் பாதிப்பு

(சாவகச்சேரி நிருபர்)



சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த சனிக்கிழமை சுகாதாரப் பணியாளர்களுக்கான பெற்றோல் விநியோகம் இடம்பெற்றது.

இதன்போது குறித்த செயற்பாட்டிற்கு பொறுப்பாக இருந்த உயர் அதிகாரிகள் உரிய திட்டமிடல் இல்லாமல் பெற்றோலை விநியோகித்தமையால் ஐநூறுக்கும் மேற்கொண்ட சுகாதாரப் பணியாளர்கள் பெற்றோல் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியிருந்தனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் அதிகாலை தொடக்கம் நீண்ட வரிசையில் காத்திருந்து பிற்பகல் 4 மணியளவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தை அண்மித்தபோது பெற்றோல் தீர்ந்துவிட்டது எனத் தெரிவிக்கின்றனர். சுகாதாரத் தரப்பின் பெற்றோல் விநியோகத்திற்கு பொறுப்பாக களத்தில் நின்ற சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர், பிரதேச செயலக அதிகாரிகள் உரிய திட்டமிடலை மேற்கொண்டிருந்தால் எமக்கு இந்த ஏமாற்ற நிலை ஏற்பட்டிராது. சரியான திட்டமிடல் இன்மையால் நாம் மோட்டார்சைக்கிளை உருட்டிச் செல்ல வேண்டியுள்ளது. கடந்த வாரமும் எமக்கான எரிபொருள் விநியோகம் இடம்பெறவில்லை என மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

பெரும்பாலான சுகாதாரப் பணியாளர்களுக்கு எரிபொருள் கிடைக்காத நிலையில், அவர்களுக்கு பதில் கூற வேண்டிய அதிகாரிகள் அவ்விடத்தை விட்டு நழுவிச் சென்ற நிலையில், பொலிஸாரே நிலைமை தொடர்பில் விளக்கமளித்து விபரீதங்களைத் தடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் பட்டப்பகலில் ரூ.10 இலட்சம் கொள்ளை

யாழ்ப்பாணம் நகரில் உள்ள கோட்டை முனியப்பர் ஆலயம் முன்பாக ஒருவரிடமிருந்து 10 இலட்சம் ரூபா பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் காலை நடந்துள்ளது.

ஆலயத்துக்கு நேற்றுக்காலை வந்த ஒருவர் தொழிலில் முதலிடவிருந்த 10 இலட்சம் ரூபாவை, பூசையில் வைத்து எடுத்துத் தருமாறு கோரியுள்ளார். பூசகரும் பணத்தை பூசையில் வைத்துவிட்டு எடுத்துக்கொடுத்த போது, அங்கு திடீரென வந்த இருவர் பணத்தைப் பறித்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# கிளிநொச்சியிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு சிகிச்சைக்கு செல்லும் மக்களுக்கான அறிவிப்பு

(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வெளி மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்கு செல்லும் மக்கள் தற்போது ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடி காரணமாக செல்ல முடியாத நிலைமை ஏற்படின் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம்கேட்டுக்கொண்டுள்ளது.

மாதாந்த அல்லது ஏனைய சிகிச்சைகளுக்கு செல்லும்பொது மக்கள் போக்குவரத்து நெருக்கடி காரணமாக மாவட்டத்திற்கு வெளியே செல்ல முடியாத நிலையில், இருப்பின் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையுடன் தொடர்புகொள்கின்றபோது மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்க முடியுமாயின்அவ்வறானவர்களுக்கு மாவட்டத்திலேயே சிகிச்சை அளிக்கவும், ஏனையவர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் தாம் நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனவே, மாவட்டத்திற்கு வெளியே சிகிச்சைக்காக செல்கின்றபொது மக்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்நோக்கின், மாவட்ட வைத்தியசாலையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# பொலிஸார் துரத்திய டிப்பர் வாகனம்
## ஆலய திருவிழாவிற்குள் புகுந்து விபத்து

யாழ்ப்பாணம் நெல்லியடி - மாலுசந்தி பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் திருவிழாவில் கூடியிருந்த பக்தர்கள் மீது, டிப்பர் வாகனம் மோதியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை இரவு சப்பரத்திருவிழா இடம்பெற்றது. அதன்போது, ஆலய சூழலில் பெருமளவான பக்தர்கள் கூடியிருந்தபோது,யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் மிக வேகமாக வந்த டிப்பர் வாகனம் பக்தர்கள் மத்தியில் புகுந்து அவர்களை மோதித்தள்ளிக்கொண்டு, அவ்விடத்தில் இருந்து தப்பிச்சென்றுள்ளது.

சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில், அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஐந்து பேர் காயமடைந்த நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக மணல் கடத்தி வந்த குறித்த டிப்பர் வாகனத்தை பொலிஸார் வழிமறித்தபோது , டிப்பர் வாகனம் பொலிஸாரின் உத்தரவை மீறி, மிக வேகமாக தப்பிச்சென்ற போதே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், விபத்தினை ஏற்படுத்திய டிப்பர் தப்பி சென்றுள்ள நிலையில் அதனை மீட்பதற்கு தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

# மக்களின் வெற்றி தற்போதைய அவலங்களை போக்கவேண்டும்!





(எஸ்.எம்.ஜாவித்)

ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கையும், சுயநல அரசியல் கலாசாரமும் நாட்டு மக்களை வீதிக்கு கொண்டுவந்து, சொல்லொணாத் துயரத்திற்கு இட்டுச் சென்றுள்ளதன் வெளிப்பாடே அரசுக்கு எதிரான தொடர் போராட்டமாகும்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கும் என்பதுபோல் இன, மத, சமய பேதமின்றி எல்லா மக்களும் ஒன்றுசேர்ந்து செய்த தியாகத்தின் ஒரு அங்கமே அரசுக்கு எதிராக மேற்கொண்ட அஹிம்சைப் போராட்டமே ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அலுவலகங்கள், வாசஸ்தலங்களை முற்றுகையிட்ட வெற்றியின் ரகசியமாகும்.

ஆயுதம் தரித்த பயிற்சிபெற்ற முப்படையினரின் உச்சக்கட்ட பாதுகாப்பு வழங்கப்பட்ட மேற்படி இடங்களை சாதாரண மக்கள் ஆக்கரமிப்பது என்பது சாதாரண விடயமல்ல. உலக நாடுகளை விடவும் இலங்கையில் மக்களுக்கு கிடைக்கப்பெற்ற இந்த வெற்றி ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது எனலாம்.

உலக வரலாற்றில் எந்தவொரு நாட்டிலும் இடம்பெற்றிராத இவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் நடந்தேறியுள்ளன. அதாவது தொடரான மக்கள் எழுச்சிப் போராட்டத்தால் ஒரே நாளில் முக்கிய தளங்கள் மக்களால் முற்றுகையிடப்பட்ட செயற்பாடுகள் எங்கும் நடைபெறவில்லை என்றே கூறலாம். இது மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்றே கூறலாம்.

ஜனாதிபதி கோட்டாபய அரசாங்கம் பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு வித்திட்டுவிட்டது என்றும் இவர்களோடிருந்த அரசியல்வாதிகள் நாட்டின் சொத்துக்களை சூறையாடி விட்டனர் என்றும், அதன் காரணமாக நாட்டில் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டு, மக்கள் இரவு பகலாக பொருட்களுக்கு நீண்ட வரிசைகளில் வீதிகளில் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைகள், பட்டினிச்சாவு மற்றும் டொலர் இன்மை என்பன ஏற்பட்டுள்ளதால் இந்த அரசாங்கத்தை பதவி விலகுமாறு கூறியே ஜனாதிபதியின் செயலகத்தை கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக முற்றுகையிட்டதுடன், நாடளாவிய ரீதியில் பல்வேறு வகையான மக்கள் எழுச்சிப் போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், பேரணிகள் என்பன தொடராகவே இடம்பெற்று வந்தன.

இவ்வாறான அஹிம்சைப் போராட்டத்தினை தடுப்பதற்காக கடந்த மே மாதம் பிரதமரின் அலரி மாளிகையில் இருந்து மொட்டுக் கட்சியின் குண்டர்களை அனுப்பி பாரிய வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டிருந்தனர். இந்த செயற்பாடு உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் பாரிய கண்டனத்திற்கும், எதிர்ப்புக்கும் வழிசமைத்ததுடன், அஹிம்சை வழிப்போராட்ட மக்களின் ஆதரவுக்கும் சந்தர்ப்பத்தை மேலும் வழுப்படுத்திக் கொடுத்திருந்தது எனலாம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் தற்போதைய ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இலங்கை மக்களின் நிம்மதியான வாழ்க்கை மறுபக்கம் சரிந்து சென்றன. குறிப்பாக பெரும்பான்மை என்ற காரணத்தினால் சிறுபான்மை மக்கள் மீது இனவாத செயற்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டன. குறிப்பாக வடக்கு கிழக்கில் ஏற்பட்ட யுத்தமாக இருக்கலாம் தென்பகுதியில் இடம்பெற்ற பல சகப்பான சம்பவங்கள் சிறுபான்மை மக்களை பாரியளவில் பாதிப்புகளுக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

குறிப்பாக தென்பகுதியில் ஒரு சில சிங்கள பௌத்த இனவாத சக்திகள் ஆட்சியாளர்களின் ஆதரவுகளுடன் முஸ்லிம் மக்களை இன மற்றும் சமய ரீதியாக ஒடுக்கவும், தாக்கவுமான பல தீய செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். தேவையற்ற விதத்தில் கருத்து முரண்பாடுகளை தோற்றுவித்து, சண்டைகளையும் உண்டாக்கி இருந்தனர். இதனால் ஒருசில அப்பாவிகளின் கொலைகளுக்கும் பலருடைய பெறுமதியான சொத்துக்களை அவர்கள் சூறையாடுவதற்கும் வழிசமைத்திருந்தனர்.

இலங்கையின் கடந்த சில தசாப்த காலத்தில் அரசியல் செல்வாக்குகள் காரணமாக மக்கள் பாரிய பாதிப்புக்களுக்கு உள்ளாகி இருந்தனர். குறிப்பாக இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்கான சலுகைகள் மற்றும் உரிமைகள் அரசியலமைப்புக்கு உட்பட்டதாக சரியான முறையில் வழங்கப்படவில்லை. இந்தச் செயற்பாடுகள் சிறுபான்மை மக்களிடத்தில் மன உளைச்சல்களையும், வெறுப்புத் தன்மைகளையும் தோற்றுவித்திருந்ததை மறுக்கமுடியாது.

இவ்வாறான துன்பியலில் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், வாழ்ந்து கொண்டிருந்த சிறுபான்மை மக்களுக்கு அராஜக அரசாங்கத்தை மாற்றுவதற்கு நாடளாவிய ரீதியிலான பெரும்பான்மை மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் சந்தர்ப்பங்களாக அமைந்ததுடன், அந்த மக்களுடன் கைகோர்த்து தமது ஆதரவுகளைத் தெரிவித்து, அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவும் தமது கருத்துக்களை தெரிவிக்கவும் வழிகோலியது எனலாம்.

மூவின மக்களும் எந்தவிதமான கசப்புணர்வுகளுமின்றி ஜனாதிபதியையும், பிரதமரையும் அவர்களோடு சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளையும் வீட்டுக்கு அனுப்பும் செயற்பாடு பாரிய வெற்றியை அளித்துள்ளதுடன், மக்கள் மத்தியில் சந்தோசத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றது. தற்போதைய வெற்றி எதிர் காலத்தில் இந்த நாட்டு மக்கள் அனைவரும் சமாதானத்துடனும், இன ஒற்றுமையுடனும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழும் ஒரு அமைதியான சூழலை ஏற்படுத்த வழி சமைக்கவேண்டும் என்பதே அநேகரின் எதிர்பார்ப்பாகும்.

எந்தவித அரசியல் பங்குபற்றலும் இன்றி பல நாட்கள் தொடர்போராட்டம் பல கண்டனப் பேரணிகள், உண்ணாவிரதங்கள் மட்டுமல்லாது, ஒருசில உயிர்களை இழந்தும் பெறப்பட்ட இந்த வெற்றி நிலைபெற, இனி அமையப்போகும் அரசாங்கமே பொறுப்பாக இருக்கவேண்டும் என்பதுடன், முற்றிலும் மக்கள் நலன்களை அடிப்படையாக வைத்து செயற்படவேண்டும் என்பதும் இங்கு முக்கியமான விடயங்களாகும்.

இந்த வகையில் தற்போது மக்கள் எரிபொருளுக்காக மக்கள் இரவு பகலாக மழையிலும், வெயிலிலும் காத்திருக்கும் நிலைக்கும் தாங்கிக்கொள்ள முடியாத விலை ஏற்றங்கள் என்பனவற்றிற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைத்து வறுமையைப் போக்கவும், மாணவர்களின் கல்வியை தடையின்றி சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கும் ஏற்புடையதான வழிவகைகளை உருவாக்க வேண்டும் என்பதே ஒட்டுமொத்த மக்களின் கோரிக்கைகளாகும்.

# சமையல் எரிவாயு வழங்கக் கோரி வங்காலை கிராம மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்



(மன்னார் நகர் நிருபர்)

நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட வங்காலை கிராம மக்கள் கடந்த சனிக்கிழமை (16) காலை சமையல் எரிவாயு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுமார் 900 லிட்ரோ சமையல் எரிவாயு, மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் வைத்து மக்களுக்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஏனைய கிராமங்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

எனினும் சனிக்கிழமை (16) வங்காலை கிராமத்திற்கு விநியோகிக்கப்படாமல் வேறு கிராமங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இந்நிலையில் வங்காலை கிராமத்தில் உள்ள 4 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் வங்காலை பிரதான வீதியை மறித்து, எரிவாயு சிலிண்டர்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் வங்காலை பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது கிராம மக்கள் தமது பிரச்சினைகளை பொலிஸ் அதிகாரியிடம் தெரிவித்ததோடு, தமது கிராமம் சமையல் எரிவாயு வழங்கும் நடவடிக்கைகளில் இருந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாக தெரிவித்து, கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

பொலிஸ் அதிகாரி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் குறித்த விடயம் தொடர்பாக தெரியப்படுத்திய நிலையில், எதிர்வரும் புதன்கிழமை (20) சமையல் எரிவாயுவை வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இந்நிலையில் பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைவாக மக்கள் அவ்விடத்திலிருந்து சென்றனர்.


சீட்டிழுக்கப்பட்ட திகதி 16.07.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4817 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,449,120.00 — அச்சிடப்பட்ட திகதி : 15.07.2022 — ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 9 1 8 5 5 6 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,299,170.60

கொவிசெத — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.07.15 சீட்டிழுப்பு இலக்கம் 3059 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,273,980.00 — ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 35 53 76 77 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,030,061.20

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 126 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,867,960.00 — லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 15.07.2022 — இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 21 23 48 54 — விசேட இலக்கினம் கடகம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,132,369.40

தன நிதானய — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /07/15 சீட்டிழுப்பு இலக்கம் : 847 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,348,000.00 — வெற்றி இலக்கினம் A வெற்றி இலக்கங்கள் 12 19 44 64 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,087,815.60

ஜாதிக சம்பத — அச்சிடப்பட்ட திகதி 15.07.2022 சீட்டிழுப்பு இலக்கம் : 1295 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,063,060.00 — வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 0 3 5 4 5 1 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,277,793.20

கோடி 26+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1165 — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி: 2022.07.15 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,108,320.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 260,978,678.00 — K 08 22 25 39 61 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk — பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத்த, கொழும்பு 01



திகதி 16.07.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4818 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,544,090.00 — ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 2 6 1 6 9 7 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,925,836.40

கொவிசெத — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.07.16 சீட்டிழுப்பு இலக்கம் 3060 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,068,820.00 — ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 23 24 49 71 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,171,016.40

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 127 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,498,360.00 — இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 24 42 46 55 — விசேட இலக்கினம் மிதுனம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,165,707.80

தன நிதானய — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /07/16 சீட்டிழுப்பு இலக்கம் : 848 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 851,060.00 — வெற்றி இலக்கினம் V வெற்றி இலக்கங்கள் 03 06 08 17 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,138,409.60

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1296 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 715,720.00 — வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 8 1 7 4 3 7 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,306,487.60

கோடி 26+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1166 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,442,460.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 261,039,114.00 — T 09 09 28 36 64 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk — பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத்த, கொழும்பு 01



சீட்டிழுக்கப்பட்ட திகதி 15.07.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4816 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,055,890.00 — அச்சிடப்பட்ட திகதி : 14.07.2022 — ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 9 6 1 1 4 6 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,299,170.60

கொவிசெத — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.07.14 சீட்டிழுப்பு இலக்கம் 3058 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,679,940.00 — ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 44 51 71 76 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,868,731.20

தன நிதானய — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /07/14 சீட்டிழுப்பு இலக்கம் : 846 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,422,600.00 — வெற்றி இலக்கினம் Y வெற்றி இலக்கங்கள் 21 38 64 82 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,013,469.60

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 125 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,272,300.00 — லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 14.07.2022 — இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 18 22 52 55 — விசேட இலக்கினம் விருச்சிகம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,098,721.60

ஜாதிக சம்பத — அச்சிடப்பட்ட திகதி 14.07.2022 சீட்டிழுப்பு இலக்கம் : 1294 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,217,360.00 — வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 0 3 8 4 8 8 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,260,079.20

கோடி 26+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1164 — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி: 2022.07.14 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,598,460.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 260,897,286.00 — X 22 08 36 50 70 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk — பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத்த, கொழும்பு 01



சீட்டிழுக்கப்பட்ட திகதி 15.07.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4815 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,764,890.00 — அச்சிடப்பட்ட திகதி : 13.07.2022 — ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 7 4 6 2 2 3 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,299,170.60

கொவிசெத — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.07.13 சீட்டிழுப்பு இலக்கம் 3057 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,769,840.00 — ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 02 30 51 78 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,685,869.60

HANDAHANA ராசி சுப பலன் — DRAW NUMBER: 124 — TOTAL PRIZE WON IN THIS DRAW Rs. 2,516,080.00 — DATE, TICKET PRINTED ON 13.07.2022 — WINNING ZODIAC CAPRICORN — WINNING NUMBERS 15 28 30 60 — THE SUPER PRIZE OF THE NEXT DRAW Rs. 3,054,776.80 — SPECIAL ZODIAC CAPRICORN

தன நிதானய — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /07/13 சீட்டிழுப்பு இலக்கம் : 845 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 937,920.00 — வெற்றி இலக்கினம் N வெற்றி இலக்கங்கள் 46 50 51 79 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,910,784.80

ஜாதிக சம்பத — அச்சிடப்பட்ட திகதி 13.07.2022 சீட்டிழுப்பு இலக்கம் : 1293 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 818,060.00 — வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 7 4 7 8 4 5 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,240,167.20

கோடி 26+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1163 — டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி: 2022.07.13 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,188,640.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 260,722,002.00 — W 23 40 41 76 80 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk — பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத்த, கொழும்பு 01

# திருகோணமலை பஸ் தரிப்பிடத்தின் பிரதான வாயிலை மூடி தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டம்





(அப்துல்சலாம் யாசிம்)

திருகோணமலை பஸ் தரிப்பிடத்தின் பிரதான வாயிலை மூடி தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்று (17) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை முதல் நண்பகல் 12 மணிவரை போராட்டம் இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்து சபையின் திருகோணமலை டிப்போவில் நேற்றைய தினம் டீசல் பெற்றுக்கொள்வதற்காக சென்றபோது டீசல் வழங்கவில்லை எனவும் தமக்கு டீசலை பெற்றுத்தருமாறு கோரியே தனியார் பஸ் ஊழியர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் திருகோணமலை தலைமையக பொலிஸார் இலங்கை போக்குவரத்து சபையுடன் கலந்துரையாடி 2500 லீட்டர் டீசலை தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு வழங்குவதாக கூறியதையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்துசென்றனர். குறித்த போராட்டத்தினால் தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

# காரைதீவு கரைவலை மீனவரின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசம் நடவடிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

காரைதீவு பிரதேசத்தைச் சேர்ந்த கரைவலை மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்து வதற்கான வேலைத்திட்டங்கள் குறித்து கல்முனை - அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் ஆராய்ந்து வருகின்றது.

நெதர்லாந்து நாட்டின் மனித நேய கூட்டுறவு சங்கத்தின் நிதி பங்களிப்பிலான ஐந்தாண்டு வேலை திட்டத்தின் கீழ் விவசாயம், வீட்டு தோட்டம், மீன்பிடி, நெசவு போன்றவை சார்ந்த சுய தொழில் முயற்சியாளர்களுக்கு சமாசம் ஆக்கமும், ஊக்கமும் வழங்குகின்றது.

காரைதீவு, நாவிதன்வெளி, கல்முனை வடக்கு, வீரமுனை, கோரக்கோயில், மல்வத்தை, மல்லிகைத்தீவு, பழைய வளத்தாப்பிட்டி, புதிய வளத்தாப்பிட்டி, அட்டப்பள்ளம், மாணிக்கமடு, திராய்க்கேணி போன்ற பிரதேசங்களில் பொருத்தமான வேலைத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னெடுக்கப்பட்ட வண்ணம் உள்ளன.

இதன் அடிப்படையில் சமாசத்தின் தலைவர் எஸ். லோகநாதன் இப்பிரதேசங்களுக்கு கள



விஜயங்கள் மேற்கொண்ட வகையில் காரைதீவு பிரதேசத்தில் கரைவலை மீனவ உறவுகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முன்னின்று பாடுபடுகின்றார்.

இதற்கு அமைய காரைதீவில் மீனவர் சிக்கன கூட்டுறவு சங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான பூர்வீக ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழர் பிரதேசங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை கூட்டுறவு துறை மூலம் மேம்படுத்த வேண்டும் என்கிற தூர நோக்குடன் மூன்று தசாப்த காலத்துக்கு முன் இச்சமாசம் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனை எரிபொருள் நிலையத்தில் அமைதியின்மை





(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு வாழைச்சேனை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சுகாதார பிரிவினருக்கு நேற்று எரிபொருள் விநியோகிக்கும்போது தமக்கும் வழங்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்தபோது அமைதியின்மை ஏற்பட்டது.

சுகாதார பிரிவினருக்கு வழங்கிய பின்னரே மீதமுள்ளதை வழங்குவதாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து இறுதியில் பொதுமக்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோது, வழங்கும் அளவு போதாது என்று தெரிவித்து வீதியினை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்தில் சிறிது நேரம் பாதிப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் நிலைமைகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். சுகாதாரப் பிரிவினர் சிலர் பெற்றுக்கொள்ளமுடியாத நிலைமையும் ஏற்பட்டது. அவர்களுக்கு பிரிதொரு தினத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் அறிவித்தல் விடுத்திருந்தார்.

# நாட்டை பொறுப்பேற்கத் தயாரென அநுரகுமார தெரிவித்திருப்பது தாமதமாக ஏற்பட்ட ஞானம்

## உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் சாடல்

(மாளிகைக்காடு நிருபர்)

நாட்டின் இன்றைய சூழலில் நாட்டை பொறுப்பெடுக்கத் தயார் என ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க சொல்லியிருப்பது மிகவும் தாமதமாக ஏற்பட்ட ஞானமாகும். இந்த அறிவு எப்போதோ ஏற்பட்டிருந்தால் நாட்டின் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் ஜே.வி.பி. வந்திருக்கும் என உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர், சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்தபோது ஜே.வி.பியினர் அவரது கட்சியுடன் இணைந்து வரலாற்றில் முதல் தடவையாக 30க்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரை பெற்றனர். சிலர் அமைச்சர்களாகவும் இருந்தனர். அதன்பின்



அவருடன் முரண்பட்டு ஆட்சியில் இருந்து விலகினர். கூட்டு சேராமல் தனித்து இயங்குவதன் மூலம் தனிக்கட்சியாக ஆட்சியை பிடிக்க முடியும் என கனவுகண்டு கடைசியில் இப்போது மூன்று எம்.பிக்களுடன் உள்ளனர்.

ஒரேயொரு உறுப்பினரான ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருப்பது ஜனநாயகமா என கேட்டவர்கள் மூன்று உறுப்பினரை மட்டும் கொண்ட ஜே.வி.பியிடம் நாட்டைக் கொடுப்பது ஜனநாயகமா எனக் கேட்டால் அதற்கு பதில் என்ன? ஜே.வி.பியினரின் அரசியல் என்பது நெளிவு சுளிவு அற்ற இறுகிய போக்காகும். இதற்கு காரணம் அக்கட்சியின் அரசியல் யாப்பாகும்.

நாட்டை நேசிப்பவர்களாக இருந்தால் தமது இறுக்கமான அரசியலில் இருந்து இறங்கி அனைவரையும் அரவணைத்து, சிறுபான்மை மக்களின் உரிமைகளை ஏற்றுச் செல்லும் புதிய பாதைக்கு ஜே.வி.பி. வரவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

# ஆலையடிவேம்பில் இரு மாதங்களுக்குப் பின் லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் வழங்கிவைப்பு



(ஆலையடிவேம்பு நிருபர்)

இரு மாதங்களுக்கு பின்னர் ஆலையடிவேம்பு தர்மசங்கரி மைதானத்தில் நேற்று முன்தினம் (16) லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் கிடைத்த தகவலை பிற்பகல் முதல் குறித்த இடத்தில் காத்திருந்த மக்கள் நேற்று முன்தினம் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுச்சென்றனர்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளரின் மேற்பார்வையோடு இராணுவத்தினரின் பூரண பங்களிப்புடன் லிட்ரோ கேஸ் நிலைய ஊழியர்களால் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் அமைதியான முறையில் இடம்பெற்றது.

இதன்போது 12.5 கிலோ எரிவாயு 500 சிலிண்டர்களும் 5 கிலோ எரிவாயு 50 சிலிண்டர்களும் 2.5 கிலோ எரிவாயு 50 சிலிண்டர்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இதன் பிரகாரம் 12.5 கிலோ எரிவாயு சிலிண்டர்கள் 5270 ரூபாவிற்கும் 5 கிலோ எரிவாயு சிலிண்டர்கள் 2200 ரூபாவிற்கும் வழங்கி வைக்கப்பட்ட நிலையில், சிலிண்டர்கள் பெறுகின்றவர்களிடம் இருந்து மே மாத மின்சாரக் கட்டணப்பட்டியல் பெறப்பட்டு அதில் குறித்த வீட்டிற்கு சிலிண்டர்கள் வழங்கப்பட்டதை உறுதிசெய்யும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் ஒரு வீட்டிற்கு இரு சிலிண்டர்கள் வழங்கப்படும் செயற்பாடு கட்டுப்படுத் தப்படவுள்ளது. இதேநேரம் 500 12.5 கிலோ எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்ட நிலையில் இன்னும் பலர் எரிவாயு சிலின்டர்களை பெற காத்திருக்கின்றனர்.

ஆயினும் இதுவரையில் ஆலையடிவேம்பு மக்கள் அமைதியான முறையில் சகல செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்கிவைப்பு



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரமவின் வழிகாட்டுதலின் கீழ் இம்முறை சிறுபோக வேளாண்மை பயிர்ச்செய்கை செய்தவர்களின் அறுவடைக்கு காத்திருக்கும் விவசாயிகளுக்கு வெட்டு இயந்திரங்களுக்கான எரிபொருள் நேற்று முன்தினம் (16) முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலை லிங்கன் நகர் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 22 விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 10 லீற்றர் டீசல் வீதம் மொத்தமாக 65 ஏக்கருக்கு 650 லீற்றர் விநியோகிக்கப்பட்டன.

உப்புவெளி கமநல அபிவிருத்தி பிரிவுக்குட்டபட்ட விவசாயிகளே இதனைப் பெற்றனர். இவை கட்டம் கட்டமாக ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் பகிர்ந்தளிக் கப்படவுள்ளன.

# பொதுமக்களின் போக்குவரத்து வசதிகளுக்காக மட்டு. மாநகருக்குள் குறுந்தூர பஸ் சேவை ஆரம்பம்

(மட்டக்களப்பு நிருபர்)

தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்துகள் மட்டுப்ப டுத்தப்பட்ட நிலையில், பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அவர்களின் நலன் கருதி புதிய உள்ளக நகர போக்குவரத்து சேவை ஒன்று அண்மையில் மட்டக்களப்பு மாமாங்கச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகரசபையின் மக்கள் நலன்கருதிய திட்டத்தின் கீழ் ஹப்பி ஹோம் லங்கா பிரைவேட் கம்பனியுடன் இணைந்து குறித்த சிற்றி ரைட் சேவையை மட்டக்களப்பு ஆயர் இல்லத்தின் முன்னாள் குருமுதல்வர் அருட்தந்தை ஏ.ஜேசுதாசனின் ஆசீர்வாதத்தைத் தொடர்ந்து மாநகர முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சுகுணன் குணசிங்கம்



ஆகியோர் நாடாவை வெட்டி புதிய பஸ் சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

மாமாங்கச் சந்தியிலிருந்து ஆரம்பித்து பார் வீதி வழியாக கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடம், அரசடி மணிக்கூட்டுக்கோபுரம், நகர பொலிஸ் நிலையம், காந்திப் பூங்கா, பிரதேச செயலகம், வைத்தியசாலை வீதி, கோவிந்தன் வீதி, இ.போ.ச பஸ் நிலையம், தாண்டவன்வெளிச் சந்தி, ரயில் நிலையம், எல்லை வீதி வழியாக மீண்டும் மாமாங்கச் சந்தியை சென்றடைந்தது.

குறித்த சேவைக்கு ஒருவழிக் கட்டணமாக பொது மக்களிற்கு ரூபாய் 50 மற்றும் மாணவர்களுக்கு ரூபாய் 40 அறவிடப்படும். குறித்த சேவை புறநகர்ப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் முன்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், மாநகர ஆணையாளர் என்.மதிவண்ணன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷ் மற்றும் மாநகரசபையின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம் கட்சிகள், எவரையும் நிபந்தனையின்றி ஆதரிக்கக் கூடாது;

## கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை

(சாய்ந்தமருது நிருபர்)

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள தேர்தலில் முஸ்லிம் கட்சிகள், எந்த வேட்பாளரையும் நிபந்தனையின்றி ஆதரிக்கக் கூடாது என்று கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வலியுறுத் தியுள்ளது.

சமூகம் சார்ந்த பிரச்சினைகளை முன்வைத்து, அவற்றுக்கு தீர்வு தரக்கூடிய வேட்பாளரையே ஆதரிக்க வேண்டும் எனவும் கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக முன்னணியின் செயலாளர் செயிட் ஆஷிப் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது;

நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட மக்கள் எழுச்சிப் போராட்டம் காரணமாக கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நாடாளுமன்றத்தினால் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

எனினும் இத்தேர்தலில் தாம் யாரை எந்த நிபந்தனையுடன் ஆதரிக்கப் போகிறோம் என்பது பற்றி நாடாளுமன்றத்தை பிரதிநிதித் துவப்படுத்துகின்ற முஸ்லிம் கட்சிகள் சமூகத்திற்கு எவ்விதமான தெளிவுபடுத்தல்களையும் இதுவரை முன்வைக்கவில்லை. குறைந்தபட்சம் தமது கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர்பீட உறுப்பினர்களுடனாவது இவ்விடயம் தொடர்பில் கூடி ஆராய்ந்ததாக தெரியவில்லை.

இவர்கள் தாம் சார்ந்திருக்கின்ற அரசியல் கூட்டணிகளின் தீர்மானங்களுடன் ஒத்துப் போகின்ற நிலைப்பாட்டிலேயே இருந்து வருகின்றனர். கடந்த காலங்களில் தமது கூட்டணிக் கட்சிகளின் நிலைப்பாடுகளையே தமது கட்சிகளின் தீர்மானங்களாக எடுத்ததைப் போன்றே ஜனாதிபதி தெரிவிலும் செயற்பட தயாராகி வருவதை அவதானிக்க முடிகிறது. தேசிய அரசியல் விவகாரங்களில் கட்சி மட்டத்திலும் சமூக மட்டத்திலும் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு இத்தலைமைகள் முன்வராமல் பின்னடிப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் அங்கம் வகிப்பதால் அவர்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க தீர்மானித்திருக்கின்றனர். இந்நிலையில் இவர்களது கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள் யாரை ஆதரிக்கப்போகிறார்கள் என்று தெரியவில்லை. 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவளித்தது போன்று தலைமைகள் ஒரு புறமும் எம்.பி.க்கள் இன்னொரு புறமும் நின்று வாக்களிக்கப் போகின்றனரா என்றும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

விமல் வீரவங்ச மற்றும் உதய கம்பன்பில போன்றோரின் சுயாதீன கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, அக்கூட்டணியின் தீர்மானத்திற்கமைவாக செயற்படுவார் என அறிய முடிகிறது. இவரிடமும் சமூக ரீதியான பார்வை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.


ஆக, முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களோ அக்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ சமூகப் பிரச்சினைகளை முன்வைத்து, அவற்றுக்கு தீர்வு தருகின்ற வேட்பாளரை ஆதரிப்பது தொடர்பில் கிஞ்சித்தும் சிந்திக்கவில்லை என்பது தெட்டத்தெளிவாக தெரிகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை சிறுபான்மையினருக்கு பாதுகாப்பானது என்பதால், ஜனாதிபதி முறை ஒழிக்கப்படக் கூடாது என கடந்த காலங்களில் குரல் எழுப்பி வந்த முஸ்லிம் கட்சிகள், ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறும்போதுதான் அதில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுடன் பேரம் பேசி சிறுபான்மையினரின் சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று அதனை நியாயபடுத்தி வந்தனர். ஆனால் தற்போது நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சமூக ரீதியான எந்தப் பேரம்பேசலுமில்லாமல் தமது சுய அரசியல் இலாபத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு, வலிந்து ஒரு வேட்பாளரை ஆதரிக்க தீர்மானம் மேற்கொண்டிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

தமிழ் கட்சிகள் தமது ஆதரவு யாருக்கு என்று இன்னும் வெளிப்படுத்தாமல், தமிழ் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு தரக்கூடிய வேட்பாளரையே தாம் ஆதரிப்போம் என்று அக்கட்சிகளின் தலைவர்கள் ஊடகங்களில் தெரிவித்திருப்பதை முஸ்லிம் கட்சிகள் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும்.

ஆகையினால், இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகத்திற்கு இன்னொரு வரலாற்றுத் துரோகத்தை செய்து விடாமல், ஜனாதிபதி வேட்பாளர்களிடம் சமூகப் பிரச்சினைகளை முன்வைத்து, அவற்றுக்கு தீர்வு தரக்கூடிய வேட்பாளரையே முஸ்லிம் கட்சிகள் ஆதரிக்க முன்வர வேண்டும். தமது சுயநலன்களுக்காக நிபந்தனை எதுவுமின்றி எவரையும் ஆதரிக்கும் எண்ணத்தைக் முஸ்லிம் தலைமைகளும் எம்.பி.க்களும் கைவிட வேண்டும். சிவில் சமூக அமைப்புகள் மற்றும் புத்திஜீவிகள் இவ்விடயத்தில் தொடர்ந்தும் மௌனம் காக்காமல், அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும் - என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

# வாழைச்சேனை இ.போ.ச. ஊழியர்கள் போராட்டம்





(மீராவோடை நிருபர்)

இலங்கை போக்குவரத்து சபை வாழைச்சேனை கிளை ஊழியர்கள் நேற்று முன்தினம் (16) போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

வாழைச்சேனை இ.போ.சபைக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியின் குறுக்கே பஸ் வண்டிகளை நிறுத்தி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடமையினை மேற்கொள்ள தூர இடங்களிலிருந்து டிப்போவுக்கு வரும் தமக்கு பெற்றோல் வழங்க வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்தே ஊழியர்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த வாழைச்சேனை பொலிஸாரும், இராணுவத்தினரும் போராட்டம் நடத்திய ஊழியர்களிடம் பேச்சுவார்த்தையை மேற்கொண்டனர்.

அந்தவகையில், நாளை ஊழியர்களுக்கு பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்ததற்கமைய ஊழியர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

# செங்கலடியில் கோட்டாவின் உருவப் பொம்மையை எரித்து, பட்டாசு கொளுத்தி வெற்றிக் கொண்டாட்டம்




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு - செங்கலடி 'கோட்டா கோ கம' போராட்டக் களத்தில் கேக் வெட்டி, பட்டாசு கொளுத்தி கோட்டபாய ராஜபக்ஷவின் உருவப் பொம்மையை தீயிட்டு கொளுத்தி வெற்றிக் கொண்டாட்டம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு செங்கலடி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 'கேட்டா கோ கம' போராட்டக்காரர்கள் 'கோட்டா கோ கம ' போராட்ட இடத்தில் கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியதை அடுத்து செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வ.சுரேந்திரன் தலைமையில் தமது வெற்றிக் கொண்டாட்டத்தை கொண்டாடினர்.

கோட்டபய ராஜபக்ஷவின் உருவப் பொம்மையை தீயிட்டு, பட்டாசு கொளுத்தி கேக் வெட்டிக் கொண்டாட்டம்.

இதேவேளை தமது போராட்டத்திற்கு வெற்றி கிடைத்துள்ளதாக கபுடா என வாசகம் பொறிக்கப்பட்ட கேக் ஒன்றையும் வெட்டிப் போராட்ட இடத்தில் பரிமாறிக் கொண்டதுடன், பொது மக்களுக்கு குளிர்பானமும் வழங்கினர்.

# அக்கரைப்பற்று ஆலயத்தில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் காயமடைந்த இளைஞன் உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)

அம்பாறை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பனங்காடு பகுதியிலுள்ள பிரசித்திபெற்ற ஆலயம் ஒன்றில் வைத்து இளைஞர் ஒருவர் மீது மேற்கொண்ட கத்திக்குத்து தாக்குதலில் காயமடைந்த இளைஞன் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி கடந்த வியாழக்கிழமை (14) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று கண்ணகிபுரத்தைச் சேர்ந்த 27 வயதுடைய குமாரசிங்கம் சிறிதரன் என்பவரே இவ்வாறு சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 14ஆம் திகதி குறித்த ஆலயத்தில் வருடாந்த உற்சவத்தின்போது ஆலயத்தில் இருவருக்கிடையே காவடி தொடர்பான வாக்குவாதம் முற்றியதையடுத்து 27 வயது இளைஞன் ஒருவர் மீது 17 வயதுடைய சிறுவன் கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டதையடுத்து, காயமடைந்தவரை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்ட 17 சிறுவனை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இந்த தாக்குதலில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு 8.30 மணிக்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# எதிர்கால அரசியல் தீர்மானங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உயர்மட்டக் குழு கூடி ஆராய்வு

(மட்டக்களப்பு நிருபர்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண அரசியல் சூழ்நிலை தொடர்பாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உயர்மட்ட குழுவினர் கடந்த வியாக்கிழமை (14) கட்சியின் தலைமைச் செயலகத்தில் கூடி ஆராய்துள்ளனர்.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் வரிசையில் ஒரு ஆசனத்தைக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும் இடம்பெறுகின்றது.

அந்த வகையில் எதிர்வரும் ஒரு சில தினங்களில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் கட்சிகளும் அவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூடி எடுக்கப் போகின்ற தீர்மானமானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கப்போவது நிச்சயமாகும்.

இந்நிலையில் நாட்டின் அதிகார மையங் களான பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிகளின் தேர்வுகள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள், அவற்றை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியானது எப்படியான அணுகுமுறையுடன் கையாளவேண்டும்? எப்படியான நிலைப் பாடுகள் எடுக்கப்பட வேண்டும்? என்பது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

இவ் விஷேட கூட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தலைவர் பணி குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

நாட்டின் எதிர்காலம் தொடர்பாக ஸ்திரமான அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் அத்தகைய அரசியல் அதிகாரத்தில் கிழக்கு மாகாண தமிழர்களின் வகிபாகத்தை உறுதிசெய்யும் இலக்கு போன்றவற்றை கருத்தில்கொண்டு கட்சியின் நிலைப்பாடுகள் அமைய வேண்டும் என்று தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

# துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்த யானை மீட்பு!



(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு - ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உன்னிச்சை பல்லாவிக் குளத்திற்கு அருகாமையில் உள்ள காட்டுப் பகுதியில் சுமார் 20 வயது மதிக்கத்தக்க காட்டு யானை ஒன்று இறந்த நிலையில், நேற்று முன்தினம் (16) மீட்கப்பட்டதாக, ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்து மட்டக் களப்பு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள சுற்றுவட்டப் பொறுப்பாளர் ஏ.அப்துல் ஹலீம் தலைமையிலான அதிகாரிகளுடன் குறித்த இடத்திற்கு சென்று இறந்த யானையை மீட்டுள்ளனர்.

குறித்த யானையின் உடம்பில் நாள்பட்ட சூட்டுக் காயங்கள் காணப்படுவதுடன், குறித்த யானை இறந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையென வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். இப்பிர தேசத்தில் கடந்த சில நாட்களாக காட்டுயானைகள் மனிதர்களை தாக்கும் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலை காணப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



**ஜனாதிபதியாக ஆர தெரியிற எண்டதில சிலர் குழம்புறாங்க எலுவா?**

**விக்கினேஷ்வரன் எம்.பி. மட்டும் சோலி இல்லாமல் ஆரு வந்தாலும் தான் நடுநில எண்டு சொல்லித்தாரு கூட்டமைப்புலதான் இப்ப ரணில எதிர்க்கவேண்டும் என ஒருசார் கொடிதூக்குறாங்க..!**

**எந்த சிங்களவன் வந்தாலும் தமிழனுக்கு விமோசனம் இல்ல என்பது மட்டுமே உண்மை..**

**பாப்பமே என்ன கூத்து நடக்கப்போகுது எண்டத..!**

# ஓட்டமாவடியில் லிட்ரோ கேஸ் விநியோகம்

(மீராவோடை நிருபர்)



ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (15) நீண்ட நாட்களின் பின்னர் 700 லிட்ரோ சமையல் எரிவாயு விநியோகம் செய்யப்பட்டது.

எரிவாயு விநியோகம் செய்யப்படும் எனும் தகவலை அறிந்து கொண்ட மக்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

அந்தவகையில், ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்கு 350 எரிவாயு சிலிண்டர்களும் வாழைச்சேனை மத்தி பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்கு 350 சிலிண்டர்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

ஓட்டமாவடி பிரதேச செயலக செயலாளர் வீ.தவராஜா மற்றும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய அதிகாரிகளின் மேற்பார்வையில் குடும்ப அட்டைகள் பெற்றுக்கொண்ட மக்களுக்கு மாத்திரம் எரிவாயு விநியோகம் செய்யப்பட்டது.

# நிந்தவூர் வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள் எரிபொருள் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்



(மாளிகைக்காடு நிருபர்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்க கோரி கடந்த வெள்ளிக்கிழமை (15) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஊர் வைத்தியசாலை வீதியில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் துணை மருத்துவ சேவையாளர்கள் சுகாதார சேவையாளர்கள் அடங்கலாக பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

இதனை அடுத்து நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.ஏ.நஜீம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாக நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊடாக இவர்களுக்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

# கல்முனையன்ஸ் போரமின் வருடாந்த பொதுக் கூட்டம்



(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை பிராந்தியத்தின் இருப்பு, கல்வி சமூக பொருளாதார துறைகளின் மேம்பாட்டில் முழு வீச்சுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் கல்முனையன்ஸ் போரமானது ஏழு ஆண்டுகள் களம் கண்டு தொடர்ந்தும் வெற்றிகரமாக பயணித்துக்கொண்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக கல்முனையன்ஸ் போரமின் நடப்பு ஆண்டிற்கான வருடாந்த பொதுக் கூட்டம் போரத்தின் காரியாலயத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர் முபாரிஸ் எம்.ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந்த வருடாந்த பொதுக் கூட்டத்தில் 2021 ஏப்ரல் தொடங்கி 2022 மார்ச் வரையான நிருவாக ஆண்டிற்கான வருடாந்த செயற்பாட்டு அறிக்கை நிர்வாகப் பணிப்பாளர் பீ.எஸ்.சன்ஸீர், பட்டயக் கணக்காளரினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையினை நிதிப் பணிப்பாளர் எம்.வை.ரிபாவினாலும் பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

மேலும் நடப்பு ஆண்டில் முன்னெடுக்க வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பான ஆலோசனைகளும், முன்மொழிவுகளும் அங்கத்தவர்களிடமிருந்து பெற்றப்பட்டு நடப்பு ஆண்டின் செயற்றிட்ட நகலும் இக்கூட்டத்தில் தயாரிக்கப்பட்டது. இதன்போது நாட்டின் சமகால பொருளாதார நெருக்கடியினை முகங்கொடுத்து எதிர்வருகின்ற பாதிப்புக்களை முகாமைத்துவம் செய்யவல்ல கல்முனை பிராந்திய மட்டத்திலான பதிலிருப்பு நடவடிக்கைகள் குறித்தும் விஷேட கவனம் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

# இலங்கையில் அமைதிவழி ஆட்சி மாற்றத்தை அனைத்துத் தரப்பினரும் உறுதிசெய்ய வேண்டும்

## ஐ.நா. வலியுறுத்து

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையில் அமைதிவழியிலான ஆட்சி மாற்றம் நிகழ்வதை அனைத்துத் தரப்பினரும் உறுதிசெய்ய வேண்டும் என ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ள நிலையில், அரசியலிலும் குழப்பமான சூழல் நிலவி வருகிறது. ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ மக்களின் தீவிர போராட்டத்தைத் தொடர்ந்து பதவியை இராஜிநாமா செய்துள்ளார். அதேவேளையில், மக்களின் அதிருப்தியைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாட்டின் இடைக்கால அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார்.

கடும் சிக்கல்களுக்கு மத்தியில் இலங்கையின் புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இலங்கைக்கான ஐ.நா. சிறப்பு அதிகாரி ஹனா சிங்கர்ஹம்டி வெளியிட்ட அறிக்கையில்,

''இலங்கையில் அமைதி வழியிலான ஆட்சி மாற்றத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும். மக்கள் சந்தித்து வரும் பிரச்சினைகளுக்கான காரணங்களுக்கும், மக்களின் குறைகளுக்கும் விரைந்து தீர்வுகாண முக்கியத்துவம் அளிக்கவேண்டும். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பேச்சுவார்த்தை ஒன்றே சிறந்த வழி.

ஆட்சிமாற்றம் தொடர்பாக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட வேண்டும். நாட்டில் சட்டம் ஒழுங்கு சூழலைக் கட்டுக்குள் கொண்டுவரும்போது, மனித உரிமை கொள்கைகளைக் கடைப்பிடித்து பாதுகாப்புப் படைகள் செயற்பட வேண்டும். இலங்கையின் உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான உதவிகளை வழங்க ஐ.நா. தயாராகவுள்ளது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**உரிய நடவடிக்கை எடுக்காவிடில் நிலைமை மிகவும் மோசமாகும்**

இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை அதிகரித்து வருவதாகவும், 60 இலட்சத்துக்கும் அதிகமானோர் போதிய உணவின்றித் தவித்து வருவதாகவும் சர்வதேச உணவுத் திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது. இது நாட்டின் மக்கள்தொகையில் 28.3 சதவீதம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக, 65,600 பேர் தீவிர உணவுப் பற்றாக்குறையால் தவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி அதிகரித்து வருவதால், உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் அரசு இந்த விவகாரத்தில் தலையிட்டு, உரிய நடவடிக்கை எடுக்காவிடில், நிலைமை மிகவும் மோசமாகும் என்றும் அந்த சர்வதேச உணவுத் திட்ட அமைப்பு எச்சரித்துள்ளது.

இலங்கையில் உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம் கடந்த ஜூனில் 80 சதவீதமாக அதிகரித்துள்ளது.

# உலக செய்திகள்

## இன்று 145ஆவது நாளாகவும் தொடரும் உக்ரைன் - ரஷ்ய போர்

# வின்னிட்சியா பகுதியில் வான் தாக்குதல்

## 3 குழந்தைகள் உட்பட 23 பேர் உயிரிழப்பு; உலக நாடுகள் கடும் கண்டனம்



உக்ரைனின் வின்னிட்சியா பகுதியில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் குழந்தைகள் உட்பட 23 பேர் உயிரிழந்த நிலையில், இதற்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இப்போர் 145ஆவது நாளாகவும் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

போரால் உக்ரைன் தலைநகர் கீவ், கார்க்கீவ் போன்ற முக்கிய நகரங்கள் சின்னாப்பின்னமாக்கப்பட்டுள்ளதுடன், தாக்குதலால் பெரும்பாலான மக்கள் வின்னிட்சியா போன்ற நகரங்களில் தஞ்சமடைந்துள்ளனர். ஆனால், 3 இலட்சத்து 70 ஆயிரம்பேர் வசித்து வந்த வின்னிட்சியா பகுதியில் ரஷ்யா வியாழக்கிழமை இரவு திடீரென வான்வெளி தாக்குதல் நடத்தியது. அப்போது பதிவான சி.சி.ரி.வி. காட்சிகள் வெளியாகியுள்ளன.

இந்த தாக்குதலில் அங்குள்ள குடியிருப்புகள், மருத்துவமனை, கலாசார மையம் தரைமட்டமானதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. இதில் 3 குழந்தைகள் உட்பட 23பேர் உயிரிழந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, 4 வயதான விசேட தேவையுடைய குழந்தையொன்று உயிரிழந்த தகவல் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.



லிஷா என்ற அந்த குழந்தையை அவரது தாய் போர் தொடங்கிய பின்னர் வின்னிட்சியாவுக்கு அழைத்து வந்துள்ளார். பாதுகாப்பாக இருப்பதற்காக அவர்கள் அங்கு வந்துள்ள நிலையில், லிஷா தற்போது ரஷ்ய தாக்குதலில் உயிரிழந்துள்ளார். அவரது தாய் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். குழந்தை லிஷாவின் இரத்தம் படிந்த பேபி ஸ்டோலரின் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

இந்த தாக்குதலுக்கு ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இதனைப் போர் குற்றம் என அந்த நாடுகள் கண்டித்துள்ளன. இதற்கு விளக்கமளித்துள்ள ரஷ்யா மக்கள் வசிக்கும் இடத்தில் தாக்குதல் நடத்தவில்லையென தெரிவித்துள்ளது. உக்ரைன் படைகள், ஆயுதங்கள் வாங்குவதற்கு வெளிநாடுகளுடன் கூட்டம் நடத்தி வந்த கட்டடத்தின் மீதுதான் தாக்குதல் நடத்தியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. எனினும், அதை ஏற்க மறுத்த உக்ரைன், திட்டமிட்டு பொதுமக்களை கொல்லும் நோக்குடன் இந்த தாக்குதல் நடந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

**38 ஆயிரம் ரஷ்ய வீரர்கள் பலி**

ரஷ்யாவுடனான போரில் இதுவரை 38,140 ரஷ்ய வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது. மேலும் உக்ரைனின் தாக்குதலில் ரஷ்ய இராணுவத்தின் 220 போர் விமானங்களும், 188 ஹெலிகொப்டர்களும், 1677 பீரங்கிகளும் அழிக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரான்ஸை வாட்டும் காட்டுத்தீ: 14,000 பேர் வெளியேற்றம்



தென்மேற்கு பிரான்சின் ஜிரான்ட் மாகாணத்திலுள்ள லான்டிராஸ் பகுதியில் காட்டுத்தீ வேகமாக பரவி வருகிறது. இந்நிலையில் குறித்த பகுதியிலிருந்து சுமார் 14ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அதை கட்டுப்படுத்த தீயணைப்பு விமானங்களின் உதவியுடன், ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர். அந்த காட்சிகள் வான் வழியாக சென்று படம்பிடிக்கப்பட்டுள்ளன.

வெப்பநிலை அதிகரித்து காணப்படுவதால் தீ வேகமாக பரவி வரும் சூழலில், அங்கு ஆயிரக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தென்மேற்கு பிரான்சில் இதுவரை சுமார் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பிலான வனப்பகுதியை காட்டுத்தீ கபளீகரம் செய்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வவுனியாவை சேர்ந்த 7 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்



*(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)*

பலத்த காற்று, கடல் சீற்றத்துக்கு நடுவே இலங்கையிலிருந்து 2 குடும்பத்தினர் தனுஷ்கோடிக்கு அகதிகளாக தப்பிச்சென்று, கடல் நடுவே மணல் திட்டில் தவித்துள்ளனர். அவர்களை இந்திய கடலோர காவல் படையினர் மீட்டனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரையிலும் தமிழகத்திற்கு 104 பேர் அகதிகளாக சென்றுள்ளனர். இந்நிலையில் மண்டபத்திலுள்ள இந்திய கடலோர காவல் படை நிலையத்திலிருந்து ஹோவர்கிராப்ட் கப்பலில், கடலோர காவல் படையினர் தனுஷ்கோடி அருகேயுள்ள இந்திய கடல் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர். வெள்ளிக்கிழமை 6 மணியளவில் தனுஷ்கோடி அருகே நடுக்கடல் பகுதியில் உள்ள முதலாவது மணல் திட்டில் இலங்கையைச் சேர்ந்த அகதிகள் தவிப்பதை பார்த்து அங்கு சென்று 3 குழந்தைகள் உட்பட 7 பேரை மீட்டு, கப்பலில் ஏற்றி அவர்களுக்கு உணவுப்பொருட்கள் கொடுத்து நேற்றுமுன்தினம் இரவு அரிச்சல்முனை கடற்கரைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

தொடர்ந்து இராமேஸ்வரம் கடலோர பொலிஸாரிடம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு 7 பேரும் ஒப்படைக்கப்பட்டு, மண்டபம் கடலோர பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்று விசாரணை நடத்தினர். விசாரணையில் இலங்கை வவுனியா செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் (வயது 40), இவருடைய மனைவி ராஜகுமாரி (வயது 36) மகன்கள் குமரன் (வயது 13), வசி (வயது 10) மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த குமரன் (வயது 38), இவருடைய மனைவி மதினி (வயது 30), மகன் பவின் (வயது 6) என்பதும் தெரியவந்தது.

அகதியாக வந்துள்ள ராஜகுமாரி பொலிஸாரிடம் தெரிவிக்கையில், ''இலங்கையில் தற்போதைய நிலைமை மோசமாகவுள்ளது. குழந்தைகளுடன் கஷ்டப்பட்டு வாழ்ந்து வந்தோம். எந்த வேலையும் இல்லை. அதனால்தான் தமிழகத்துக்கு தப்பி வந்தோம். தலைமன்னாரிலிருந்து பகல் 12 மணிக்கு பிளாஸ்டிக் படகில் புறப்பட்டோம். 2 படகோட்டிகள் எங்களை அழைத்து வந்தனர். இலங்கை பணம் ரூ.2 இலட்சம் அவர்களுக்கு கொடுத்தோம். படகில் வரும்போது குழந்தைகளுடன் கரை சேர்ந்து விடுவோமா என்ற பயம் இருந்தது. அந்த அளவுக்கு பயங்கர காற்றும், கடல் சீற்றமும் இருந்தது'' - என்று தெரிவித்தார்.

## மூடப்படும் 'நோர்ட் ஸ்ட்ரீம்-1' இயற்கை எரிவாயு குழாய்

# ரஷ்யாவின் முடிவால் இருளில் மூழ்கும் அபாயத்தில் ஜேர்மனி




ஜேர்மனிக்குச் செல்லும் இயற்கை எரிவாயு குழாய் லைனை (நோர்ட் ஸ்ட்ரீம்-1) ரஷ்ய அரசு மூடியுள்ளது. இதனால் அந்நாட்டுக்குக் கிடைக்கும் இயற்கை எரிவாயு உள்ளிட்ட வளங்கள் கிடைப்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக சர்வதேச அளவில் எரிபொருள் ஏற்றுமதி வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவிடமிருந்து இறக்குமதிசெய்யப்படும் எரிபொருள், உணவு உள்ளிட்ட பொருட்களை சார்ந்து இருக்கும் ஐரோப்பிய நாடுகள் இதனால் பாரிய பாதிப்பை சந்தித்துள்ளன.

அந்தவகையில், ஐரோப்பாவில் மிகப்பெரிய பொருளாதார நாடாக விளங்கும் ஜேர்மனி, இயற்கை எரிவாயு நெருக்கடியை எதிர்கொள்வதாகவும், பல்வேறு நாடுகளுக்கான எரிபொருள் விநியோகத்தை ரஷ்யா குறைத்த பின்னர், குளிர் காலத்துக்கான சேமிப்பு தங்களிடம் மிகவும் குறைவாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதனால் ஜேர்மனியில் தொழில்துறை நிறுவனங்கள் தாங்கள் பயன்படுத்தும் இயற்கை எரிவாயுவின் அளவைக் குறைக்க வேண்டும் என்றும் அந்நாட்டின் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நீடித்துவரும் உக்ரைன் போர் காரணமாக கடந்த வாரம் முதல் எரிபொருட்களின் விலை உயர்ந்து, இயற்கை எரிவாயு விநியோகத்தை ரஷ்யா குறைத்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஜேர்மனி அரசு தெரிவித்துள்ளது.

மேலும் ரஷ்யாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே எரிபொருள் வர்த்தக பிரச்சினை நீடிப்பதால், ஜேர்மனியும் பிற நாடுகளும் நிலக்கரியை பயன்படுத்த முனைந்துள்ளன.

**அச்சுறுத்தல்**

இது, ஐரோப்பாவில் பருவநிலை இலக்குகளை அடைவதற்கு அச்சுறுத்தலாகவுள்ளது. நம்மால் இன்னும் உணரமுடியாவிட்டாலும், நாம் இப்போது எரிவாயு நெருக்கடியில் இருக்கிறோம் என அந்நாட்டின் எரிசக்தி, ஆற்றல்துறை அமைச்சர் ரொபர்ட் ஹாபெக் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஜேர்மனிக்குச் செல்லும் இயற்கை எரிவாயு பைப்லைனை முழுமையாக மூடியுள்ளது ரஷ்யா.

ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிவரை நீடிக்கும் இந்த பைப்லைன் வழக்கமாக ஜூலை 11ஆம் திகதி ஆண்டு பராமரிப்பு பணிகள் காரணமாக மூடப்படும். 10 நாட்கள் வரை நீடிக்கும் இந்தப் பராமரிப்புப் பணிகள் முடிந்த பின்னர் இந்த பைப்லைன் மீண்டும் திறக்கப்பட்டு, இயற்கை எரிவாயு விநியோகம் தொடரும். ஆனால், இந்தமுறை அந்த பைப்லைனை திறக்கப்போவதில்லை என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

இம்முறை பகுதியாகவோ அல்லது நிரந்தரமாகவோ இந்த பைப்லைன் மூடப்படுவதற்கு வாய்ப்புள்ளது என்று ரஷ்யா அறிவித்துள்ளதாகத் தெரிகிறது. இதனால் இந்த குளிர்காலத்தில் ஜேர்மனியில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஜேர்மனிக்கு பைப்லைன் வழியாக இயற்கை எரிவாயுவை விநியோகம்செய்யும் கேஸ்பிரோம் நிறுவனம் இதைத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கனடாவிலிருந்து எரிவாயுவை உற்பத்திசெய்து அனுப்பும் இயந்திரத்தை சீமென்ஸ் நிறுவனம் கொண்டுவர அனுமதிக்கும் ஒரு ஆவணம் கேஸ்புரோம் நிறுவனத்திடம் இல்லை.

எனவே, ஜெர்மனிக்கு இயற்கை எரிவாயுவை அனுப்பும் 'நோர்ட் ஸ்ட்ரீம்-1' குழாய் வழியாக மீண்டும் எரிவாயுவை அனுப்புவதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது.

**உடனே முடிவு எடுக்க முடியாது**

இந்நிலையில், "நோர்ட் ஸ்ட்ரீம்-1 எரிவாயு குழாய் செல்லும் போர்ட்டோவாயா பகுதியில் அமைந்துள்ள கேஸ் குழாய் ஆலை வழியாக பாதுகாப்பான செயற்பாட்டை உறுதிசெய்ய முடியாத நிலையில் உள்ளோம். எனவே, இந்தத் திட்டத்தில் உடனடியாக முடிவை எங்களால் எடுக்க முடியாது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாத தொடக்கத்தில் ஜேர்மனிக்கு அனுப்பப்படும் இயற்கை எரிவாயுவில் 60 சதவீதத்தை ரஷ்யா குறைத்தது. கனடாவிலிருந்து வரவேண்டிய இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்யும் 'கேஸ் டர்பைன்' கருவி வருவதில் தாமதம் ஏற்பட்டதால் ஜேர்மனிக்கு அனுப்பும் இயற்கை எரிவாயுவை குறைத்தோம் என்று ரஷ்யா அதற்கு காரணம் தெரிவித்திருந்தமைக் குறிப்பிடத்தக்கது.

# இந்திய குடியரசுத் தலைவர் தேர்தல் இன்று

நாட்டின் 16ஆவது குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.

இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூலை 24ஆம் திகதியுடன் நிறைவடைவதால், அடுத்த குடியரசுத் தலைவருக்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. ஆளும் பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் ஜார்கண்ட் மாநில முன்னாள் ஆளுநர் திரௌபதி முர்முவும், காங்கிரஸ், தி.மு.க., திரிணாமூல் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளராக முன்னாள் மத்திய அமைச்சரும், திரிணாமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவருமான யஷ்வந்த் சின்ஹாவும் போட்டியிடுகின்றனர்.

டில்லியிலுள்ள நாடாளுமன்றம், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலுள்ள சட்டமன்றங்களிலும் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த தேர்தலில் மாநிலங்களவை, மக்களவை உறுப்பினர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் வாக்களித்து குடியரசுத் தலைவரைத் தெரிவு செய்யவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு தலா 708 ஆக உள்ளது. சட்டமன்ற உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு அந்தந்த மாநிலங்களின் மக்கள்தொகையைப் பொறுத்து மாறுபடுகிறது. அந்த வகையில், தமிழகத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு 176 ஆக உள்ளது. இந்த தேர்தலில் மொத்த வாக்குகளின் மதிப்பு 10,86,431 ஆக உள்ளது. இதில் அதிக வாக்கு மதிப்பு பெறுவோர் குடியரசுத் தலைவராக அறிவிக்கப்படுவர்.

வாக்கு எண்ணிக்கை 21ஆம் திகதி நடைபெற்று அன்றைய தினமே தேர்தல் முடிவுகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவிக்கவுள்ளது.

# மன்னாரில் சுகாதார பணியாளர்களுக்கு 2ஆவது தடவையாக எரிபொருள் விநியோகம்



மன்னார் நகர் செய்தியாளர்

மன்னாரில் சுகாதார பணியாளர்களுக்கு நேற்றுமுன் தினம் இரண்டாவது தடவையாக எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மெல் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் ஆகியோரின் ஏற்பாட்டில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் பணிபுரியும் சுகாதார ஊழியர்களுக்கு இவ்வாறு எரிபொருள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் எரிபொருள் பிரச்சினை உச்ச கட்டத்தை எட்டியுள்ள நிலையில், தமது அத்தியாவசிய தேவைகளுக்கு எரிபொருள் வழங்கக் கோரி மன்னாரில் கடந்த முதலாம் திகதி சுகாதார பணியாளர்கள் கவனயீர்ப்பு போராட்ட மொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றையும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளித்திருந்தனர்.

இந்நிலையில் சுகாதார ஊழியர்களின் கோரிக்கையின் அடிப்படையில் முதல் கட்டமாக கடந்த 2ஆம் திகதி விசேட ஏற்பாட்டின் கீழ் சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் (16) சனிக்கிழமை 2ஆவது தடவையாக சுகாதார பணியாளர்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டுள்ளது. வைத்தியர்கள் மற்றும் சுகாதார பணிப்பாளர்களின் மேற்பார்வையில், கடற்படை, இராணுவம் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் எவ்வித தடங்கலும் இன்றி எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# களுத்துறையில் சைக்கிள் பாவனை சடுதியாக அதிகரிப்பு

(பீ.எம்.முக்தார்)

களுத்துறை மாவட்டத்தில் தற்போது சைக்கிள் பாவனை பல மடங்காக அதிகரித்துள்ளது. எரிபொருள் இல்லாமை, எரிபொருளை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக சைக்கிள் பாவனை கூடியுள்ளது. சைக்கிளை மக்கள் கூடுதலாக பயன்படுத்த ஆரம்பித்துள்ளதனால் புதிய சைக்கிள்களின் விளையும் சடுதியாக அதிகரித்துள்ளது. வீடுகளில் பயன்படுத்தாமல் கைவிடப்பட்டிருந்த பழைய சைக்கிள்கள் திருத்தப்பட்டு அவை பயன்படுத்தப்பட்டும் வருகிறது.

புதிய சைக்கிள்களின் விலைகளும் அதிகரிப்போடு, உதிரிப்பாகங்களின் விலைகளும், திருத்துவதற்கான கூலியும் அதிகரித்துள்ளன. வீதிகளில் மோட்டார் சைக்கிள்கள் குறைந்து சைக்கிள்கள் கூடியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

# காலி உலமா சபை தலைவரிடம் நிறைவேற்றுக்குழு நலம் விசாரிப்பு

(பீ.எம்.முக்தார்)

சுகயீனமுற்று வீட்டில் ஓய்வெடுத்து வரும் காலி மாவட்ட ஜம்மியதுல் உலமா சபை தலைவரும் காலி, நாவின்ன அலிய்யா அரபுக் கல்லூரி பணிப்பாளருமான மூத்த கலீபதுஷ் ஷாதுலி மவ்லவி அல்ஹாஜ் உஸ்தாத் அல்ஹாஜ் எம்.இஸட் முஹம்மது ஸுஹர் (பாரி), ஆலிமை சுகம் விசாரிப்பதற்காக அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை நிறைவேற்றுக் குழு அண்மையில் அன்னாரின் காலி இல்லத்திற்கு சென்றிருந்தனர். ஜம்மியாவின் தலைவர் மௌலவி அல்ஹாஜ் எம்.ஐ ரிஸ்வி (முப்தி), உப தலைவர்களான மவ்லவி புர்ஹான் (பஹ்ஜி),மவ்லவி உஸ்தாத் அல்ஹாஜ் எம்.எல்.எம் ரிலா (ஹஸனி), மௌலவி அப்துர் ரஹ்மான் (ரவ்ழி), உட்பட பல நிறைவேற்று குழு உறுப்பினர்களும் சமூகமளிதிருந்தனர்.

# காலி பதிற்கடமை காதியாக சாபி நியமனம்



(பீ.எம்.முக்தார்)

பலப்பிட்டிய, எல்பிட்டிய காதி நீதிபதி ஏ.ஸீ.எம்.சாபி, காலி வலய பதிற்கடமை புரியும் காதியாக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். முன்னாள் காதி எம்.ஜீ.எம்.அலி இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து இவரது நியமனம் இடம்பெற்றுள்ளதுடன், நீதிமன்றப் பிரதேசம் காலி மாவட்டம் முழுவதுக்குமாக அமைந்துள்ளது.

2015ஆம் ஆண்டிலும் இங்கு பதிற்கடமை புரிந்துள்ள இவரது அனுபவங்களைக் கொண்டு இவர் கடமையை ஏற்றுக்கொண்டவுடன், பிரதேசத்தில் அதிகரித்து வரும் விவாகரத்துகளை இயன்றவரை குறைப்பதற்கான சில செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பிரபல பள்ளிவாசல்களை மையமாகக்கொண்டு துறை சார்ந்த பிரமுகர்களை இனங்கண்டு அவர்களது ஒத்துழைப்புடன், "முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டமும் நடைமுறைகளும்" பற்றிய விழிப்புணர்வு கூட்டங்களை நடத்துதல், நாட்டில் நிலவும் நெருக்கடி நிலையில் குடும்ப வாழ்க்கை பிரச்சினைகள், பிளவுகள், பிரிவினைகள், இணைந்து வாழுதல், தாபரிப்பு வழங்குதல், வழக்கு தாக்கல், சமரசம் போன்றவற்றில் மக்களுக்கான "காதி நீதிமன்ற இடம்பெயர் சேவை" களை நடத்துதல் பற்றி பிரமுகர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்களது பங்களிப்பையும் கோரியுள்ளார். இதற்கு மேலதிகமாக வேறு காதி நீதிமன்றங்களில் தீர்ப்பு வழங்கமுடியாதுபோன வழக்குகள் பலவற்றிற்கும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விசேட காதியாக நியமிக்கப்பட்டு, அவை சிறந்த முறையில் தீர்த்து வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் இவர் தென் மாகாணத்தில் ஒரு சிரேஷ்ட காதியுமாவார்.

# ஜப்பான் அரசாங்கத்துடன் இலங்கை தூதுக்குழு பேச்சு

## நிதி உதவி, இருதரப்பு உறவுகள் குறித்தும் கலந்துரையாடல்

நாட்டுக்கு நிதி உதவிப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோர் ஜப்பானிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய விவகாரப் பிரிவின் உதவி அமைச்சர் காணோ டேகிரோவுடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இருதரப்பு அரசியல், பொருளாதார நிலைமைகள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது மற்றும் மக்களுடனான உறவை வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையின் துறைமுகம், விமான நிலையம், தொலைத்தொடர்பு, மருத்துவமனைகள் மற்றும் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட திட்டங்களுக்கு ஜப்பானின் நீண்டகால நிதிப்பங்களிப்பு குறித்து இலங்கை சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மன்னாரில் முன்னறிவித்தலின்றி திடீர் நீர்வெட்டு

**பெரும் அசௌகரியத்துக்குள்ளாவதாக மக்கள் விசனம்**



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டுவரும் மன்னார் பிரதேச பாவனையாளர்களுக்கான உள்ளக குடிநீர் விநியோகம் நேற்று முன்தினம் (16) காலை முதல் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி தடைப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டு வரும் மன்னார் பிரதேச பாவனையாளர்களுக்கான உள்ளக குடிநீர் விநியோகம் எவ்வித தடைகளும் இன்றி 24 மணிநேரமும் விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

எனினும் நேற்று முன்தினம் (16) காலை முதல் குடிநீர் விநியோகம் எவ்வித முன் அறிவித்தலும் இன்றி தடைப்பட்டுள்ளது. இதனால் பாவனையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர். இவ்விடயம் தொடர்பாக மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் தொடர்புகொண்டு வினவியபோது,

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே குறித்த நீர் விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. உரிய முறையில் எரிபொருள் வழங்கப்படவில்லை. இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். தற்போது எமக்கு தேவையான எரிபொருள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே உடனடியாக மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டு வரும் மன்னார் பிரதேச பாவனையாளர்களுக்கான உள்ளக குடிநீர் விநியோகம் வழமைக்குத் திரும்பும்-என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சங்கத்தானையில் கைக்குண்டு மீட்பு



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கத்தானைப் பகுதியில் உள்ள வீட்டு வளவொன்றில் கடந்த வியாழக்கிழமை வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த காணியை துப்பரவு செய்தபோது கைக்குண்டு அடையாளம் காணப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் கைக்குண்டினை அப்புறப்படுத்தியுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வீடு புகுந்து பெற்றோல் திருட்டு

**யாழ்ப்பாணத்தில் சம்பவம்**





யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்து பெற்றோலை இருவர் களவாடியுள்ளனர்.

குறித்த வீட்டினுள் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நுழைந்த இருவர், வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை திருடிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

காலையில் வீட்டார் எழுந்து மோட்டார் சைக்கிளை இயக்கியபோது மோட்டார் சைக்கிள் இயங்காத நிலையிலேயே பெற்றொல் மோட்டார்சைக்கிளிலிருந்து திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அதன் பின்னர் வீட்டில் பொருத்தியிருந்த பாதுகாப்பு கண்காணிப்பு கெமராவில் பரிசோதித்த போது, வீட்டினுள் அத்துமீறி நுழைந்த இருவர் மோட்டார் சைக்கிளில் பெற்றொல் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

# மொனராகலை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோதல்





கெலும் குணதிலக்க

மொனராகலை – வெல்லவாய வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக பெருந்திரளானோர் வருகைத் தந்திருந்த நிலையில், அவர்களுக்கிடையே மோதல் இடம் பெற்றுள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர். இதன் காரணமாக பதற்ற நிலையை தணிப்பதற்கு இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர். பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

# துளிச் செய்திகள்

குளியாபிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹல எலதலவ பகுதியில் நேற்றுமுன்தினம் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட பெண்ணொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார். எலதலவ, தீகல்ல பகுதியைச் சேர்ந்த 76 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கூரிய ஆயுதத்தால் தாக்கியதாகக் கூறப்படும் 71வயதுடைய நபர் ஒருவரை சந்தேகத்தின்பேரில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

★★★★★★★

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை பகுதியில் 10 கிராம் 880 மில்லி கிராம் ஹெரோயின் வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 40, 38 வயதுடைய இரத்மலானை, வாதுவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து இரு தங்கச்சங்கிலிகளும் 60 ஆயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

★★★★★★★

பேலியகொடையில் 06 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின் வைத்திருந்த இருவர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பேலியகொடை, வத்தளை பகுதிகளைச் சேர்ந்த 20, 24 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

★★★★★★★

பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொரேதுடுவ பகுதியில் 05 கிராம் 240 மில்லி கிராம் ஹெரோயின் வைத்திருந்த 37 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★★★★★★★

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கந்த பகுதியில் 05 கிராம் 740 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 30 வயதுடைய இளைஞர் ஒருவரை நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★★★

அனுமதிப்பத்திரம் இன்றி மரப்பலகைகளை ஏற்றிச்சென்ற லொறியொன்றை லுணுகம் வெஹெர பகுதியில் சுற்றிவளைத்த பொலிஸார் சாரதியை கைதுசெய்துள்ளனர். இந்நபர் 29 வயதுடைய படல்கும்புர பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.






*கொழும்பில் உள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தூதரகத்தின் அனுசரணையின்கீழ் எமிரேட்ஸ் ரெட் கிரஸன்ட் மற்றும் செய்யத் நன்கொடை மனிதாபிமான நிறுவனத்தின் அல் அதானி திட்டத்தின் கீழ் 2022 ஆண்டில் உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. இலங்கையில் பொருளாதார நெறுக்கடியில் கஸ்டப்படும் 3800 குடும்பங்களுக்கு 27 பிரதேசங்களில் இந்த உலர் உணவுப்பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன என ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கொழும்பு தூதரகத்தின் அதிகாரி தெரிவித்தார்.* (படங்கள் - அஷ்ரப் ஏ சமத்)

## உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில்
# சாதிக்கத் தவறிய யுபுன்




ஆவது உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் அமெரிக்காவின் ஒரிகொன் மாகாணத்தில் உள்ள யுஜின் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வருகிறது. இதில் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் காலை நடைபெற்ற 7 சுற்றுக்களை கொண்ட ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் பங்கேற்ற இலங்கையின் யுபுன் அபேகோன் 3ஆவது சுற்றில் பங்கேற்றார்.

அமெரிக்கா, பிரேசில் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீரர்களுடன் போட்டியிட்ட யுபுன், தூரத்தை 10.19 செக்கன்களில் ஓடிமுடித்து 5ஆவது இடத்தையே பெற்றார். இதன்மூலம் அவர் அரையிறுதிக்கு தகுதி பெறும் வாய்ப்பைத் தவறவிட்டார்.

ஒரு வாரத்திற்கு முன்னர் அதே தூரத்தை 9.96 செக்கன்களில் ஓடிமுடித்து தெற்காசியாவிலேயே 100 மீற்றர் தூரத்தை 10 செக்கன்களுக்குள் ஓடிய முதலாவது வீரர் என்ற வரலாற்று சாதனையை ஏற்படுத்திய யுபுன் அபேகோன், உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் சாதிக்கத் தவறினார்.

ஒலிம்பிக்குக்கு அடுத்து உலகில் நடைபெறுகின்ற மிகப்பெரிய மெய்வல்லுனர் போட்டித் தொடராக விளங்குகின்ற உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் 192 நாடுகளைச் சேர்ந்த 1,972 வீர, வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

# மேற்கிந்திய தீவுகளை வெள்ளையடிப்பு செய்த பங்களாதேஷ்




மேற்கிந்திய தீவுகள் அணியுடனான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை பங்களாதேஷ் அணி எதிரணியின் சொந்த மண்ணிலேயே வைத்து 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

பங்களாதேஷ் அணி மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூவகையான தொடர்களிலும் பங்கேற்றது. இரு அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி கயானாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 48.4 ஓவர்களில் 178 ஓட்டங்களில் சுருண்டு போனது. இதனை தொடர்ந்து 179 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் ஆடிய பங்களாதேஷ் அணி 48.3 ஓவர்களில் இலக்கை கடந்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் முழுவதுமாக கைப்பற்றியது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# முதல் இலங்கை வீரராக சாதனை படைத்த பிரபாத்

பாகிஸ்தான் அணியுடன் நடைபெற்றுவரும் முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜெயசுரிய தனது முதல் ,ரண்டு டெஸ்டில் 3 ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இலங்கை வீரர் என்ற சாதனையை படைத்தார். மேலும் இந்த சாதனையை நிகழ்த்திய உலகின் 8வது வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

கடந்த வாரம் ஆஸி. அணியுடன் நிறைவுக்கு இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் முறையாக இலங்கை அணியில் அறிமுகம் பெற்ற பிரபாத் ஜெயசுரிய முதல் இன்னிங்ஸில் 118 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களையும், 2வது இன்னிங்ஸில் 59 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களையும், பாகிஸ்தானுக்கு எதிரான முதல் இன்னிங்ஸில் 82 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும் வீழ்த்தினார்.

முத்தையா முரளிதரன் மற்றும் ரங்கன ஹேரத் ஆகியோருக்குப் பிறகு தொடர்ச்சியாக மூன்று ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய மூன்றாவது இலங்கை சுழற்பந்து வீச்சாளர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

இதேவேளை பிரபாத் ஜெயசுரிய 2வது இன்னிங்ஸில் மேலும் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினால், முதல் இரண்டு டெஸ்டில் 4 ஐந்து விக்கெட்டுகளை எடுத்த உலகின் முதல் வீரர் என்ற உலக சாதனையை படைப்பார்.




## எப்.எஸ்.கே. மியன்டாட் ப்ரீமியர் லீக் சீசன் – 2
# இரண்டாவது தடவையாகவும் சம்பியனான பொலி லயன்ஸ்



(கல்முனை நிருபர்)

சாய்ந்தமருது மியண்டாட் விளையாட்டு கழகத்தின் எப்.எஸ்.கே. மியண்டாட் ப்ரீமியர் லீக் சீசன் -2 கடினபந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை பொலி லயன்ஸ் அணி தனதாக்கிக் கொண்டது.

சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை ஆரம்பமான குறித்த சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியானது பொலி லயன்ஸ் மற்றும் மாளிகா யுனைட்டட் ஆகிய அணிகளுக்கிடையில் சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.




நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய பொலி லயன்ஸ் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி, மட்டுப்படுத்தப்பட்ட 8 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 75 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மாளிகா யுனைடட் அணி 8 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களை பெற்றுக்கொள்ள 10 ஓட்டங்களினால் பொலி லயன்ஸ் அணியினர் வெற்றிபெற்றனர்.

குறித்த கிரிக்கெட் சுற்றுத் தொடரானது ஆலோசனை சபைத் தலைவர் எஸ்.எம். அமீர் தலைமையில் கழகத் தலைவர் ஏ. பாயிஸ், கழக தவிசாளரும், எப்.எஸ்.கே. மியண்டாட் பிரீமியர் லீக் உரிமையாளருமான ஜே.எம். காலித், வர்த்தகரும் சமூக சேவையாளருமான எஸ். பஸ்மீர், அல்-அமானா நற்பனிமன்ற தலைவரும் சமூக சேவையாளருமான ஏ.எல். பரீட் ஹாஜி, சுபிரி எட் நிறுவன பணிப்பாளர் எ.சஸ்ரின் ஜெஸாத், சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவரும், ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தருமான எம்.எம்.உதுமாலெவ்வை, நான்கு அணிகளின் உரிமையாளர்கள் மற்றும் கழகத்தின் உயர் பீட உறுப்பினர்கள் அனைவரின் பங்கு பற்றுதலுடன் ஆரம்பமானது.




இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக பொலி லயன்ஸ் அணியின் என்.எல்.எம்.சாஹிர், தொடர் ஆட்ட நாயகனாக மருதூர் வோரியஸ் அணியின் எஸ்.எல்.மனாஸ், தொடரின் அதிகூடிய ஓட்டங்களை பெற்றவராக மருதூர் வோரியஸ் அணியின் எஸ்.எல்.மனாஸ், தொடரின் அதிகூடிய விக்கெட்டுக்களை பெற்றவராக மாளிகா யுனைடட் அணியின் ஏ.பி.எம்.பைஸால், தொடரின் அதிகூடிய ஆறு ஓட்டங்களை பெற்றவராக சாந்தம் சலன்ஜேஸ் அணியின் ஏ.எச்.எம்.முர்ஸித், தொடரின் அதிகூடிய நான்கு ஓட்டங்களை பெற்றவராக சாந்தம் சலன்ஜேஸ் அணியின் யு.எல்.எம். ஆஷிக், தொடரின் வளர்ந்து வரும் வீரராக சாந்தம் சலன்ஜேஸ் அணியின் என்.எம்.ஹைஸ் ஆகியோர் தெரிவானாளறர்.

இதேவேளை குறித்த சுற்றுத் தொடரில் தந்தையும் மகனும் இரு அணிகளில் விளையாடியது அனைவராலும் வெகுவாகப் பேசப்பட்டமை சிறப்பம்சமாகும்.

# T 20 உலகக்கிண்ணத்திற்கான இறுதி இரு அணிகளும் தெரிவு

அவுஸ்திரேலியாவில் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகின்ற 2022 ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடரில் பங்கேற்கும் இறுதி இரு அணிகளாக சிம்பாப்வே மற்றும் நெதர்லாந்து அணிகள் தகுதி பெற்றுள்ளன.

மொத்தம் 16 அணிகள் பங்குபெறவுள்ள குறித்த ஐ.சி.சி டி20 உலகக் கிண்ண தொடரில் விளையாடும் 14 அணிகள் ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட நிலையில், தொடரில் ஆடும் எஞ்சிய இரண்டு அணிகளையும் தெரிவுசெய்வதற்காக, தகுதிகாண் தொடர் சிம்பாப்வேயில் நடைபெற்றது. தொடரின் அரையிறுதிப் போட்டிகளில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவான நெதர்லாந்து மற்றும் சிம்பாப்வே அணிகள் டி20 உலகக் கிண்ணத்திற்கான தமது வாய்ப்புக்களை உறுதிசெய்தன.




## மரதன் இன்னிங்ஸ் ஆடிய
# பாபர் அஸாம் – நஸீம் ஷா ஜோடி



சுற்றுலா பாகிஸ்தான் அணியுடனான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் நேற்று காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நிறைவுக்கு வந்தது. ஆரம்பத்தில் தங்களது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 222 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்திருந்த நிலையில், பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் இரு விக்கெட் இழப்பிற்கு 24 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டத்தில் தங்களது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணியின் ஆரம்ப விக்கெட்டுகள் மளமளவென சரிந்தது.


எனினும் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் நிதானமான துடுப்பாட்டத்தை வெளிப் படுத்த, இறுதியில் வந்த துடுப்பாட்ட வீரர்கள் அவருக்கு உறுதுணையாக நிலைத்து ஆடினர்.

ஒரு கட்டத்தில் 9 விக்கெட்கள் இழப்பிற்கு 148 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், இறுதி விக்கெட்டுக்காக ஆடுகளம் நுழைந்த நஸீம் ஷா, பாபர் அஸாமுக்கு சிறந்த துணையை வழங்கினார்.

இருவரும் இணைப்பாட்டமாக 185 பந்துகள் ஆடி 70 ஓட்டங்களை குவித்தனர். பாபர் அஸாம் 7ஆவது டெஸ்ட் சதமடித்து 119 ஓட்டங்களை பெற்ற நிலையில் இறுதி நபராக ஆட்டமிழந்தார். 4 ஓட்டங்கள் முன்னிலையில் தங்களது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது ஒரு விக்கெட்டை இழந்து 36 ஓட்டங்களை பெற்றிருந்தது. இன்று போட்டியின் 3ஆவது நாள் ஆட்டம் தொடரவுள்ளது.




# எரிபொருளுக்காக இரு நாட்கள் வரிசையில் நின்ற சாமிக்க



இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன இரண்டு நாட்கள் காத்திருந்து எரிபொருள் பெற்றுக்கொண்டதாக தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட காணொளியில் தெரிவித்ததாவது,

“கழக கிரிக்கெட் சீசன் இருப்பதால், நாங்கள் கொழும்பில் பயிற்சிக்காக வேறு வேறு இடங்களுக்கு செல்லவேண்டும். ஆனால் நான் கடந்த இரண்டு நாட்களாக எரிபொருளுக்காக வரிசையில் நின்றேன். 10 ஆயிரம் ரூபாவுக்கு எரிபொருள் நிரப்பினேன். அது 2 அல்லது 3 நாட்களுக்கு நீடிக்கும் என்று நினைக்கிறேன்” என தெரிவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7